
அரச அபிவிருத்தி நிருமாணக் கூட்டுத்தாபனம்

"உட்கட்டமைப்பு நிருமாணத்தின் முன்னோடிகள"







2018 வருடாந்த அறிக்கை

வீடமைப்பு மற்றும் நிருமாண அமைச்சு

பொருளடக்கம்

	பக்கம்
• கூட்டுத்தாபனம்	01
• கூட்டுறவுத் தகவல்	02
• நோக்கு, இலக்கு, விழுமியங்கள்	03
• தலைவரின் செய்தி	04-06
• பணிப்பாளர் சபை மற்றும் சிரேஷ்ட உத்தியோகத்தர் குழாம்	07
• நிருமாண கருத்திட்டங்கள், கொங்கிரீட் முற்றவெளிகள், பொது அலுவலகம் மற்றும் சுற்றுப்பிரயாண பங்களாக்களின் அமைவிடங்கள்	08-09
• கூட்டுறவு ஆளுமை	10-13
• செயற்பாட்டு மற்றும் நிதிசார் மீள்நோக்கு	14-20
• மனித வளங்கள் மீள்நோக்கு	21-22
• கணக்காய்வுக் குழு அறிக்கை	23-25
• நிதி அறிக்கைக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு பற்றிய கூற்று	27
• 10 ஆண்டு செயற்பாட்டு சுருக்கம்	28
• கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை	29-37
• பரவலான வருமானக் கூற்று	38
• நிதி நிலைமை தொடர்பான கூற்று	39
• சமநிலை மாற்றங்களின் கூற்று	40
• நிதி ஓட்டக் கூற்று	41
• கணக்கியற் கொள்கைகள்	42-53
• கணக்குகள் பற்றிய குறிப்புக்கள்	54-72

அரச அபிவிருத்தி, நிருமாணக் கூட்டுத்தாபனம்

அரச அபிவிருத்தி நிருமாணக் கூட்டுத்தாபனம் (SD&CC) பாரிய சிவில் பொறியியல் ஒப்பந்தங்களை பொறுப்பேற்பதற்காக 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் 1971 இல் தாபிக்கப்பட்டது. பொதுத் திறைசேரியே இக்கூட்டுத்தாபனத்தின் ஏக பங்குதாரராக உள்ளது.

பாலங்கள், வீதிகள் மற்றும் பெருந்தெருக்கள், அணைக்கட்டுகள், நீர்ப்பாசனக் கட்டமைப்புக்கள்/திட்டங்கள், நீர் மின்வலுச் சுரங்கப்பாதைகள் மற்றும் மின்வலு நிலையங்கள் ஆகியவற்றை நிர்மாணிப்பதிலும் நீர் வழங்கல் சுத்திகரிப்பு வேலைகள், கட்டிடங்கள் மற்றும் வனப்பிரதேசங்களை சுத்தம் செய்தல் மற்றும் காணிகளை சீர்செய்தல் போன்ற பணிகளிலும் கூட்டுத்தாபனம் ஈடுபட்டுள்ளது.

மேலும், கூட்டுத்தாபனமானது முன்வார்ப்பு கொங்கிரீட் உற்பத்திகள், முன்வலுவூட்டப்பட்ட கொங்கிரீட் பாலம் உற்பத்திகள், மின்கடத்தல் தூன்கள், கொங்ரீட் ரயில் தண்டவாள இரும்புச் சட்டங்கள் போன்றவற்றை உற்பத்தி செய்கின்ற முன்னோடி நிறுவனமாகத் திகழ்கின்றது.

நாட்டின் உட்கட்டமைப்பு அபிவிருத்திகளில் மும்முரமாக பங்கேற்பதன் மூலம் தேசிய பொருளாதரத்தில் நேரடியான பங்களிப்பை ஏற்படுத்துவதற்கு மேலதிகமாக பொறியியலாளர்கள் மற்றும் ஏனைய தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கும் அரசிடம் இருந்து எந்தவொரு மானியத்தையும் எதிர்பாராமல் கூட்டுத்தாபனம் பயிற்சியளித்து வருவதுடன் நாட்டுக்கு ஆற்றுகின்ற சேவை போன்றே கைத்தொழிலுக்கு மதிப்பிட முடியாத சேவையையும் செய்துவருகின்றது.

கூட்டிணைப்புத் தகவல்கள்

நிறுவனத்தின் பெயர் (அ.அ.நி.கூ)	: அரச அபிவிருத்தி நிருமாணக் கூட்டுத்தாபனம்
நிறுவனத்தின் சட்டபூர்வமான அந்தஸ்து	: அரச கூட்டுத்தாபனம்
கூட்டிணைக்கப்பட்ட சட்டம்	: 1957 இன் 49 இலக்க கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டம்
கூட்டிணைக்கப்பட்ட ஆண்டு	: 1971
பதிவு செய்யப்பட்ட அலுவலகம்	: இல. 7, பொருபன வீதி, இரத்மலான. தொலைபேசி: 0112607560
கொங்க்ரீட் வார்ப்புத் தளங்கள்	: i. இரத்மலான கொங்கிரீட் தளம், இல.7, பொருபன வீதி, இரத்மலான தொலைபேசி: 0112-632786 ii. போபிட்டிய கொங்கிரீட் தளம், பன்னல. தொலைபேசி: 037-2288415 iii. வேரகன்தொட்ட கொங்கிரீட் தளம், மகியங்கன. தொலைபேசி :055-2257101 iv. மதவாச்சி கொங்கிரீட் தளம், யாழ்ப்பாண வீதி மதவாச்சி. தொலைபேசி: 025-3899916 v. பேராதனை விற்பனை நிலையம் தொலைபேசி: 081-2387056
கணக்காய்வாளர்	: கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
வங்கியாளர்	: இலங்கை வங்கி மக்கள் வங்கி சம்பத் வங்கி

தூரநோக்கு, இலட்சியநோக்கு மற்றும் குறிக்கோள்கள்

தூரநோக்கு

"தேசிய பொருளாதாரத்திற்கு பணப் பெறுமதிசேர்க்கின்ற தலைசிறந்த உட்கட்டமைப்பு அபிவிருத்தி, நிர்மாணத்துறை நிறுவனமாதல்".

இலட்சியநோக்கு

தேசிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் பல்வேறு நிருமாணச் செயற்பாடுகளில் பங்கேற்பதன் மூலமும் அவ்வாறான செயற்பாடுகளை உயர்தர நியமத்தில் மேற்கொள்வதன் மூலமும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவுதல் மற்றும் சிவில் பொறியியல் நிருமாண மற்றும் முன்வலுவூட்டப்பட்ட, முன்வார்க்கப்பட்ட கொங்ரீட் கைத்தொழில் துறையில் சந்தையின் முன்னோடியாகத் திகழ்தல்.

குறிக்கோள்கள்

1. இலங்கையில் அல்லது வெளிநாட்டில் எந்தவொரு உள்ளூர் அல்லது வெளிநாட்டு கம்பனியில் கூட்டாக அல்லது சுயேச்சையாக எந்தவொரு தரப்பினருக்கும் சொந்தமான கட்டிடங்கள், சிவில் பொறியியல் ஏனைய பொறியியல் திட்டங்கள் அல்லது ஏனைய முயற்சிகளின் முதலீடு மற்றும் புலனாய்வு, திட்டமிடல், வடிவமைப்பு, நிருமாண செயற்பாட்டு மற்றும் முகாமைத்துவ முயற்சிகளில் பங்கெடுத்தல் மற்றும் அவ்வாறான கம்பனிகளின் பங்குகளைச் சுவீகரித்தல், வைத்திருத்தல் போன்ற கருமங்களை ஆற்றுதல்.

2. மேற்படி கருத்திட்டப் பணிகளை இலங்கையில் அல்லது வெளிநாட்டில் கூட்டாகவோ அல்லது சுயேட்சையாகவோ எந்தவொரு உள்ளூர் அல்லது வெளிநாட்டு நிறுவனம் அல்லது கம்பனியில் மேற்கொள்ளல் அல்லது மேற்பார்வை செய்தல் அத்துடன் அத்தகைய கம்பனியில் பங்குகளைப் பெற்றுக்கொள்ளல் அல்லது வைத்திருத்தல்.

3. மேற்படி (1) மற்றும் (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காக இயந்திரவியல் மற்றும் மின்னியல் வேலைகளைத் திட்டமிடல், வடிவமைத்தல் மற்றும் பொருத்துதல்.

4. பொறியியல் வேலைகளைப் பொறுப்பேற்பதற்கு தேவையான வலுவூட்டப்பட்ட கொங்கிரீட் மற்றும் முன்வலுவூட்டிய கொங்கிரீட் தயாரிப்புக்களை இலங்கையிலும், வெளிநாட்டிலும் உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல்.

5. பொறியியல் கருத்திட்டங்களுக்குத் தேவையான நிருமாண பொருட்கள், நிருமாண மூலப் பொருட்கள் மற்றும் உற்பத்தி விற்பனை இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கான நிருமாண சாதனங்களைப் பெற்றுக்கொள்ளல்.

6. மேலே பந்திகள் (1) (2) (3) மற்றும் (4) போன்றவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட நிருமாண பொருட்கள், முறைமைகள் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பிலான ஆராய்ச்சியை மேற்கொள்ளல்.

7. மேலே பந்திகள் (1) (2) (3) மற்றும் (4) இல் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்திற்குத் தேவையான நிருமாண பொறியியல், மற்றும் முகாமைத்துவத் துறைகளில் அறிவு, நவீன தொழில்நுட்ப மற்றும் வியாபார திறமைகளை உயர்த்துவதற்கு முகாமைத்துவ பொறியியல்.. தொழில்நுட்ப ஆளணியினருக்கு பயிற்சியளித்தல் வாய்ப்புக்களை வழங்குதல்.

8. பலம்வாய்ந்த சுய நிதிசார் ஆற்றலைக் கொண்ட நிறுவனமாக செயற்படுதல்.

9. இலாபம் ஈட்டுகின்ற பலம்வாய்ந்த நிறுவனமாக இருப்பதற்கு ஆகக்குறைந்தது 10% இலாப எல்லையை பேணிவருவதல்.

10. 30% நிலைபேறான புரள்வு வளர்ச்சியை அடைந்துகொள்ளல்.

11. இடர்களை இனங்கண்டு முறையாக முகாமைத்துவம் செய்தல்.

தலைவரின் செய்தி

2018 டிசம்பர் 31 இல் முடிவடைந்த நிதி ஆண்டுக்கான அரச அபிவிருத்தி நிருமாணக் கூட்டுத்தாபனதத்தின் ஆண்டறிக்கையினைச் சமர்ப்பிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

பேரிணைச் சூழல் மீதான கண்ணோட்டம்

2018 ஆம் ஆண்டில் நாட்டின் உண்மைத் தேசிய உற்பத்தியானது முன்னைய ஆண்டின் 3.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 3.2 சதவீதமாகக் காணப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு பாரியளவில் சேவைத்துறையே பங்களித்திருத்திருந்ததுடன் அது 4.7 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் விவசாயச் செயற்பாடுகள் 4.8 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. எனினும், நிர்மாணத் துறையில் ஏற்பட்ட பின்னடைவு காரணமாக கைத்தொழில் துறை குறிப்பிடத்தக்களவில் 0.9 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்திருந்தது.

பொருளாதாரத்தின் 4 பிரதான கூறுகளான விவசாயம், கைத்தொழில், சேவைகள் மற்றும் மானியத்தைக் கழித்த வரிகள் என்பன 2018 ஆம் ஆண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு முறையே 7.9%, 27%, 56.8%, மற்றும் 8.3% பங்களிப்பை வழங்கியிருந்தன.

நிர்மாண கைத்தொழில் மீதான கண்ணோட்டம்

நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) மற்றும் இலங்கை தேசிய நிர்மாண சங்கம் (NCASL) ஆகியன இலங்கை நிர்மாணக் கைத்தொழிலின் தலைமை நிறுவனங்களாகவும் ஒழுங்கமைத்தல் கண்காணிப்புப் பிரதிநிதிகளாகவும் திகழ்கின்றன. அரசாங்கத்திற்கு சொந்தமான பல நிறுவனங்களும் மற்றும் தனியார் நிறுவன கம்பனிகளும் CIDA உடன் தம்மை பதிவுசெய்துள்ளன. பதிவு செய்யாத முறைசாராத நிர்மாண நிறுவனங்களும் சர்வதேச நிர்மாண நிறுவனங்களும் நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

நிர்மாணக் கைத்தொழில் துறையின் அபிவிருத்தி கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்களை நெருக்கமாக பின்தொடர்ந்திருந்தது. இத்தொழில்துறையின் கேள்வியில் தாக்கம் செலுத்துகின்ற பிரதான காரணிகளாக பொருளாதார நிலைமைகள் காணப்பட்டன. நிர்மாண வேலைகளில் ஈடுபட்டுள்ள அநேக நிறுவனங்கள் போட்டிமிக்க கேள்விகோரல் ஊடாகவே அவற்றின் பெரும்பான்மையான நிர்மாண ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொண்டிருந்தன. மனிதவலுப் பயிற்சியளித்தல் மற்றும் பொருத்தமான நிர்மாண வளங்களின் ஊடான பலமான நிர்மாணத் துறைக் கட்டமைப்பு என்பன இத்துறையில் ஈடுபட்டுள்ள நிர்மாண நிறுவனங்கள் எதிர்நோக்கியுள்ள சவால்களாக காணப்படுகின்றன.

அரச அபிவிருத்தி, நிருமாணக் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகை

இந்தக் கூட்டுத்தாபனம் கடந்த ஆண்டுக்கான ரூபா 2,348 மில்லியன் மொத்தப் புரள்வுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் ரூபா 2,878 மில்லியன் மொத்தப் புரள்வை ஈட்டியுள்ளது. இக் காலப்பகுதியில் காணப்பட்ட அதிகமான கருத்திட்டங்களின் எண்ணிக்கையே புரள்வில் ஏற்பட்ட இந்த அதிகரிப்புக்கு பிரதான காரணியாகும். 2018 ஆம் ஆண்டில் ரூபா 18.5 மில்லியன் தேறிய இலாபமாக (வரிக்கு முன்னர்) ஈட்டப்பட்டது. இது கடந்த ஆண்டில் கிடைக்கப்பெற்ற தேறிய இலாபமான ரூபா 12.2 மில்லியனுடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பொன்றாகும்.

பொருட்களுக்கான விலை அதிகரிப்பு, தொழிளாளர்களுக்கான செலவு அதிகரித்தல் மற்றும் ஏனைய செயற்பாட்டு செலவுகள் அதிகரிப்பு ஆகியவற்றின் காரணமாக கூட்டுதாபனத்தின் செயற்பாட்டு செலவு அதிகரித்துள்ளது. கருத்திட்டங்கள் மூலமாக கிடைக்கின்ற இலாபத்தின் அளவை உயர்வாக வைத்திர்ப்பது இலகுவான பணியல்ல. தனியார் கம்பனிகளது செயற்பாட்டு செலவுகள் குறைவாக காணப்படுவதன் காரணமாக அவர்களினால் கவர்சிகரமான விலை வீதங்கள் வழங்கப்படுகின்றமையால் போட்டித்தன்மை கேள்விகோரல் காரணமாக அதற்கு ஏற்ற விதத்திலெயே கூட்டுத்தாபனமானது குறைவான இலாப எல்லையினை பேண வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. இது கூட்டுத்தாபனம் தற்போது எதிர்கொள்ளும் முக்கியமான சவாலாகக் காணப்படுகின்றது.

அரசாங்க நிருவனங்களிடம் தற்போது போதியளவு நிதி காணப்படாததன் காரணமாக கருத்திட்டங்களுக்காக அறவிடப்பட வேண்டிய கடனை அறவிட்டுக் கொள்வது கடினமாகியுள்ளது. இதனால் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்க வேண்டிய கடன் நிலுவையும் பாரியளவில் அதிகரித்துள்ளது.

கிடைக்க வேண்டிய தொகைகள் உரிய திகதிகளில் கிடைக்காத பட்சத்தில் கருத்திட்டங்களுக்குத் தேவையான தொழிற்படு மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு வங்கிக் கடன்கள் மற்றும்

வங்கி மேலதிகப்பற்று வசதிகள் ஆகியவற்றை பெற்றுச் செயற்பட வேண்டிய நிலை ஏற்படுகின்றது. கடன் செலவின அதிகரிப்பதானது கூட்டுத்தாபனத்தின் இலாபம் மற்றும் தொழிற்பாட்டு மூலதனம் ஆகியவற்றை பாதகமாக பாதிக்கின்றது என்பதுடன் தொழிற்படு மூலதன சிக்கலும் அதிகரிக்கின்றது.

வருட இறுதியில் காணப்பட்ட ஊழியர்களது எண்ணிக்கை 629 ஆகும்.

கூட்டுத்தாபனம் எதிர்நோக்கியுள்ள சவால்கள்

அரசாங்கத்தினாலும், வெளிநாடுகளினாலும் நிதியிடப்பட்ட கருத்திட்டங்கள் குறைவாக காணப்பட்டதன் காரணமாக இத்துறையில் நிலைத்திருக்கக்கூடிய அளவிற்கு போதிய எண்ணிக்கையிலான கருத்திட்டங்களை பெற்றுக்கொள்வதில் கூட்டுத்தாபனம் பல சிரமங்களை எதிர்க்கொண்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட கருத்திட்டங்கள் தொடர்பில் கூட்டுத்தாபனம் கேள்விமனுக்களை சமர்ப்பிப்பது தொடர்பில் விதிக்கப்பட்ட மட்டுப்பாடுகள் கூட்டுத்தானம் வளர்ச்சி ரீதியான இடர்ப்பாடுகளை எதிர்க்கொள்வதற்கு ஒரு காரணியாக அமைந்திருந்தது.

நிதி ஒதுக்கீடுகள் மற்றும் அவற்றை விடுவித்தல் தொடர்பில் நோக்குகையில் தற்போதைய கருத்திட்டங்கள் தொடர்பில் பொதுத் திறைசேரி மற்றும் சேவை பெறுனர் அமைப்புகள் ஆகியன குறைவான தொகைகளையே வைத்துள்ளன. இதன் காரணமாக கூட்டுத்தாபனமானது திரவத்தன்மை ரீதியான பிரச்சினைகளை எதிர்க்கொண்டது. இதன் காரணமாக தொழிற்படு மூலதன தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக வங்கிக் கடன்களை நாட வேண்டிய நிற்பந்தம் ஏற்ப்பட்டது. இவை அதிகளவு நிதி ரீதியான செலவுகளை ஏற்படுத்தின. அதே வேலை மேற்கொண்ட வேலைகளுக்காக சேவை பெறுனர் அமைப்புகளிடமிருந்து உரிய நேரத்தில் நிலுவைகளை பெற்றுக்கொள்ள முடியாமை மற்றும் தாமதங்கள் காரணமாக தொடர்ச்சியாக வேலைகளை நிறுத்தி வைக்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது.


மேலும் பொறியியல் மதிப்பீடுகளை விட குறைவான தொகைக்கு தனியார் துறை போட்டியாளர்கள் விலை மனுக்களை சமர்ப்பிக்கின்றன. இத்தகைய நிலைமைகளின் காரணமாக அரச அபிவிருத்தி, நிர்மாணம் கூட்டுத்தாபனம் போன்ற அரசாங்க நிறுவனங்கள் கடும் போட்டியினை எதிர்க்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பொழிப்புரை

கூட்டுத்தாபனத்தின் செயலாற்றல் வெற்றிக்கு வழங்கிய வழிகாட்டல்கள் மற்றும் ஒத்துழைப்புக்காக கௌரவ வீடமைப்பு, நிர்மாண மற்றும் கலாசார அமைச்சர் உள்ளிட்ட கௌரவ பிரதி அமைச்சர் மற்றும் வீடமைப்பு நிர்மாண மற்றும் கலாசார அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட ஏனைய அமைச்சின் சிரேஷ்ட பதவியணி உறுப்பினர்களுக்கும் எனது இதயப்பூர்வமான நன்றியை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அவ்வாறே பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கு அவர்கள் வழங்கிய மகத்தான பங்களிப்புக்காகவும், கூட்டுத்தாபனத்தின் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு ஒரு குழுவாக அர்ப்பணிப்புடன் பணியாற்றிவந்த பொது முகாமையாளர் பிரதி பொது முகாமையாளர்கள் சிரேஷ்ட பதவியணி உறுப்பினர்கள், குழு அங்கத்தவர்கள் ஏனைய எல்லா மட்டத்திலுமுள்ள ஊழியர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கைக்காக எமது பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களான வீதி அபிவிருத்தி அதிகார சபை, நீர்ப்பாசனத் திணைக்களம், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, எல்லா மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைகள், இலங்கை மின்சார சபை மற்றும் புகையிரத திணைக்களத்திற்கும் என்பவற்றிற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எதிர்காலத்தில் மிகச் சிறப்பாக அவர்களுக்குச் சேவையாற்றுவதன் மூலம் நம்பிக்கையைப் உறுதியாக வைத்திருப்பதற்கு நாம் எமது பணிகளை முன்னெடுத்துச் செல்வோம்.



பொறியியலாளர் டீ.பீ.எம். சந்தன
தலைவர்

பணிப்பாளர் சபை மற்றும் சிரேஷ்ட பதவியணி உறுப்பினர்கள்


பணிப்பாளர் சபை

1.	கலாநிதி ரஜீவ் ஹேரத் மீவக்கல	-	தலைவர்
2.	திரு .மெர்வின் என். டி சில்வா	-	உப தலைவர்
3.	திரு.ஜி.ஏ.அஜித் பிரியந்த	-	திறைசேரி பிரதிநிதி
4.	பொறியியலாளர் வை.எம்.ஐ.பண்டார	-	பணிப்பாளர்
5.	திரு நந்தன மல் குமார	-	பணிப்பாளர்
6.	திருமதி சந்தமாலி சந்திரசேகர	-	பணிப்பாளர்
7.	பொறியியலாளர் பி. அமரசூரிய	-	பணிப்பாளர்

சிரேஷ்ட பதவியணி உறுப்பினர்கள்

1. பொறியியலாளர் திரு எம் டி.எஸ். விஜயபண்டார- பொது முகாமையாளர்
2. பொறியியலாளர் திரு டி.எஸ்.டி.டி.சி. ராஜசிங்க - பிரதி பொது முகாமையாளர் (அபிவிருத்தி மற்றும் திட்டமிடல்)
3. பொறியியலாளர் திரு எஸ்.எம்.எஸ். சக்கூர் - பிரதி பொது முகாமையாளர் (நிருமானம்)
4. பொறியியலாளர் திரு வி.எல். வீரதுங்க - பிரதி பொது முகாமையாளர் (இயந்திரவியல்)
5. பொறியியலாளர் திரு. எம்.ஆர்.சீ.எஸ் குணரத்ன - பிரதிப் பொது முகாமையாளர் (செயலாற்றுகைக் கண்காணிப்பு)
6. திரு டபில்யு.ஏ.என். ஆசிறி பொன்டோ - பிரதி பொது முகாமையாளா (நிதி)
7. திரு கே.ஏ.ஜி. விக்ரமசிங்க - சிரேஷ்ட முகாமையாளர் (மனிதவளம் மற்றும் நிருவாகம்)
8. திரு ஆர்.ஏ.கே.நிசாந்த - பிரதம உள்ளக கணக்காய்வாளர்
9. திரு. ஆர்.கே.கே. அமரசேன - விநியோக முகாமையாளர்
10. பொறியியலாளர் டபிள்யு.ஏ.டி.ஆர். சாந்த குமார - பிரதம பொறியியலாளர் - 1
11. பொறியியலாளர் கே.ஏ.யு. ரன்ஜன் - பிரதம பொறியியலாளர் – 2
12. பொறியியலாளர் திருமதி டி.ஏ.பி. தமயந்தி - பிரதம பொறியியலாளர் – 3
13. பொறியியலாளர் பி.எஸ்.ஆர். பெரெரா - பிரதம பொறியியலாளர் (மின்னியல்)
14. பொறியியலாளர் இ.கெ.ஜி. சந்தன - வேலைத்தள முகாமையாளர் (கொங்ரீட் தளம்)
15. ஏ.கே. சந்திரரத்ன - பிரதம பாதுகாப்பு அதிகாரி

கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான நிர்மாணக் கருத்திட்டங்கள், அலுவலகங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் அமைந்துள்ள இடங்கள்



கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான நிர்மாணக் கருத்திட்டங்கள், அலுவலகங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் தொடர்பான விபரங்கள்

1088 – கரமெடிய வாராந்தச் சந்தை நிர்மாணம்
1097 – வலசமுல்ல பேரூந்து நிலையம்
1098 – நீர்கொழும்பு பொது வைத்தியசாலை புனரமைப்பு
1108 – லக்கல பிரதேச வைத்தியசாலைக்கான வார்ட் கட்டிடத்தொகுதி
1111 - புனர்வாழ்வு நிலைய புனரமைத்தல் மற்றும் பண்டாரபுர நீர் சுத்திகரிப்பு நிர்மாண எஞ்சிய சிவில் வேலைகள்
1113 – மட்டக்களப்பு 1/1 ஆம் இலக்க பாலப் புனரமைப்பு – திருக்கொண்யடிமடு – திருகோணமலை வீதி (A015)
1115 - இருதயநோய் சிகிச்சைப் பிரிவு புனரமைத்தல் - இலங்கை தேசிய வைத்தியசாலை
1119 - உத்தேச திஸ்ஸமஹாராம நீர் வழங்கல் முன்னேற்றத் திட்ட வேலைகளை
1120 - மூகம்மன நீர்த்தாங்கியின் திருத்த வேலைகள்
1123 – மீரிகம வர்த்தக கட்டிடத்தினை வடிவமைத்து நிர்மாணித்து பூரணப்படுத்துதல்.
1130 – ஹொரண பகுதி 1 (கட்டம் 11) உத்தேச பேரூந்து நிலையத்தினை வடிவமைத்து நிர்மாணித்தல்
1132 – பொலன்னறுவை ரோயல் கல்லூரியின் கேட்போர்கூட நிர்மாணம்
1134 – புலத்சிங்கள சந்தையினை வடிவமைத்து நிர்மாணித்தல்
1135 – கிங்ஸ்லி வீவியிலுள்ள கழிவோடையினை மேம்படுத்தல்
1136 – மாதிவல கிழக்கு திருப்புமுனைத் திட்டம் - கட்டம் 1
1138 – தெஹிவல – மகரகம வீதி
1139 – காலி மீன்பிடி துறைமுகத்தின் இறங்குதுறை வசதி
1140 – காலி பத்தேகம வீதியிலுள்ள மொரகொட கால்வாயின் குறுக்கே கஹடுவாவத்த பால நிர்மாணம்
1141 – பொல்கஹவல – கோகாலை வீதி (4+760-6+815km)
1142 – பொது வைத்தியசாலை பொலன்னறுவை
1143 – சவாரி பூங்காவின் அவுஸ்திரேலிய வலயத்திலுள்ள காணிச் சுத்திகரிப்பு, மதில் நிர்மாணம் மற்றும் உள்ளக கிரவல் வீதி நிர்மாணம்
1149 – தேசிய வீதி வலைப்பின்னல் நிலச்சரிவு அனர்த்த பாதுகாப்புச் செயற்திட்டம் - பொதி 01
1151 - இ.மி.ச. பயிற்சி நிலையம் - பிலியந்தல
1152 – உமா ஓய கீழ் நீர்த்தேக்க அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கதவு நிர்மாணம்
1153 – குளியாபிடிய பாதசாரதிகள் சுரங்கப்பாதை
1155 – தலைமன்னார், முருங்கன், ஆனையிறவு, பளை புகையிரத நிலைய அதிபர் விடுதிகள்
1158 – கிரிந்தி ஓயவின் ஊடாக விஜிதபுரவிற்கும் தம்பேவேலனைக்கும் இடையே பால நிர்மாணம்
1160 – அல்லகல இல் கிரிந்தி ஓயவினை ஊடறுத்து பால நிர்மாணம்
1161 – மோதரபெலஸ்ஸ இல் கிரிந்தி ஓயவினை ஊடறுத்து பால நிர்மாணம்
1162 - வெலிபொதவெல - கொததோர இற்கு இடையே பால நிர்மாணம்
1163 – தலிகல மற்றும் ரிதியகம இற்கு இடையே வலவ ஆற்றின் குறுக்கே பால நிர்மாணம்
1167 – கொடகொக்கல நீர் வழங்கல் திட்டம், கட்டம் 11
1171 – உடுவில மற்றும் ரம்பேவத்த இற்கு இடையே கிரிந்தி ஓயவினை ஊடறுத்து பால நிர்மாணம்
1172 – கடுவன கெசல்வத்தையில் ஊறுபொக்க ஓயவினை ஊடறுத்து பால நிர்மாணம்
1173 - லுனகம்வெஹர ஆற்றுப் படுக்கையில் கடுகன்னாவ 6 இல் பால நிர்மாணம்
1174 – ரம்புக்வேவ பிரிவிலுள்ள வெலிகத்தர இற்கு குறுக்கே பால நிர்மணம்
1175 – முவன்வெவ மற்றும் வீரவில்லாறு இற்கு இடையே வீரவில் ஆற்றின் குறுக்கே பால நிர்மாணம்
1176 – அபயபுர பிரிவிற்கும் பன்னேகமுவ பிரிவிற்கும் இடையே தியபந்திய பால நிர்மாணம்
1177 – பதிகன்தொட மற்றும் லயன்கஸ்தொட இற்கு இடையே வலவ ஆற்றினை ஊடறுத்து பால நிர்மாணம்



அக்போபுர பாலம்

களுகங்கை சுரங்கப்பாதை





திருகோணமலை பாலம்



ரிதியாகம

கூட்டிணைப்பு ஆளுகை

அரச அபிவிருத்தி நிருமாணக் கூட்டுத்தாபனத்தின் (SD&CC) குறிக்கோள்கள் மற்றும் இந்தக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதன் கருத்துக்கள் மற்றும் செயலாற்றலைக் கண்காணித்தல் போன்றன கூட்டிணைப்பு ஆளுகையின் ஊடாக முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன. எனவே அனைத்துப் பொருண்மையான வணிக இடர்களையும் செயற்திறனாக இனங்காண்பதனையும், அவற்றை கட்டுப்படுத்துவதனையும், முகாமைத்துவம் செய்வதனையும் கூட்டிணைப்பு ஆளுகையின் மேம்படுத்துகின்றது.

கூட்டுத்தாபனம் முழுமையாக அரசுக்குச் சொந்தமான நிறுவனம் என்ற வகையில் வீடமைப்பு, நிருமாண மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினதும் பொதுத் திறைசேரியினதும் மேற்பார்வையின் கீழ் செயற்படுகின்றது. வரிசை அமைச்சின் ஊடாக பணிப்பாளர் சபையனது நேரடியாக அரசாங்கத்திற்குப் பொறுப்புக்கூற கடப்பாடுடையது. எனவே, சட்ட ஒழுங்கு விதிகளின் வரம்புக்கு அமைய முழுமையாக கூட்டுத்தாபனத்தின் எதிர்பார்ப்புகளிற்கும் அதன் ஆர்வமுள்ள தரப்பினர்களின் சிறந்த நலனைத் தாபிப்பதற்கும் நிறுவனத்தின் நல்லாளுகையினை உறுதிசெய்வதற்கு கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையும் சிரேஷ்ட முகாமைத்துவமும் கடப்பாடு கொண்டுள்ளது.

அரசியலமைப்புக்கு அமைய அரச நிதிக் கூட்டுப்பாடு தொடர்பில் பாராளுமன்றம் முழுமையான கட்டுப்பாடைக் கொண்டுள்ளது. எனவே அரச தொழில்முயற்சிகள் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்படுகின்றன. அமைச்சரவையானது, அரச தொழில்முயற்சிகள் பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ளும் பொறுப்பைக் கொண்டுள்ளது. அரச கூட்டுத்தாபனங்களின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் பொதுத் திறைசேரி பொறுப்பைக் கொண்டுள்ளது. இதற்கு திறைசேரியினால் பணிப்பாளர் சபை, பொருளாதார வினைத்திறன் மற்றும் விளைதிறனை ஏற்படுத்திக் கொள்வதற்கான அவர்களின் பொறுப்பை நிறைவேற்றுவதை உறுதிசெய்துகொள்ளத் தேவையான ஒழுங்குவிதிகள், சட்டங்கள், நியமங்கள், வழிகாட்டல்கள் மற்றும் கட்டளைகளை சுற்றறிக்கைகளின் மூலம் வெளியிடப்படுகின்றது.

திறைசேரியின் பிரதிநிதியாக நடவடிக்கை மேற்கொள்ளும் பணிப்பாளர் அல்லாத ஏனைய பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் நியமனங்கள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் சிபாரிசின் அடிப்படையில் அமைச்சின் செயலாளரினால் மேற்கொள்ளப்படுவதுடன், பங்குரிமையைக் கொண்டுள்ள திறைசேரியினால் ஒரு பணிப்பாளர் நியமனம் செய்யப்படுகின்றார்.

கூட்டுத்தாபனத்தின் நலன் மற்றும் அதன் பணிப்பாளர் சபையின் தனிப்பட்ட நலன்களுக்கு இடையே ஒன்றுக்கொன்று மோதல் நிலை இல்லை என்பதுடன், கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் பேணிவரப்படுவது நிர்மாணத்துறையில் மென்மேலும் சிறந்த நிதிசார் மற்றும் செயற்பாட்டு சக்திகளைக் கொண்ட நிறுவனமாக மாற்றியமைப்பதற்காகும். நிறுவனத்தின் நல்லாட்சிக்காக அரச அபிவிருத்தி, நிர்மாணக் கூட்டுத்தாபனம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பின்வருமாறாகும்.

கூட்டிணைப்பு ஆளுகைத் தத்துவங்கள்

கூட்டிணைப்பு ஆளுகைத் தத்துவங்கள்	பின்பற்றப்படும் முறை
பணிப்பாளர் சபை	
பணிப்பாளர் சபையின் உள்ளடக்கம்	ஐந்து நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள், ஒரு நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் ஒரு தலைவரை இச்சபை உள்ளடக்குகின்றது. ஐந்து நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களுக்குப் புறம்பாக ஒரு நிறைவேற்றுப் பணிப்பாளர் பொதுத் திறைசேரியினால் நியமிக்கப்படுவார். கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் மற்றும் அக்கறை தொடர்பான தூரநோக்கு மற்றும் ஒரு நியாயமான வழிகாட்டலை வழங்குவதற்குத் தேவையான பல தரப்பட்ட தேர்ச்சி நுட்பங்கள் மற்றும் நிபுணத்துவத்தைக் கொண்டதாக இக்குழு இருக்கின்றது.
முறையாக பணிப்பாளர் சபைக் கூட்டங்களை நடாத்துதல்	விஷேட சபைக் கூட்டங்களை நடாத்துவது அவசியமாகின்ற போது நடாத்தப்படுகின்ற கூட்டங்களுக்கு மேலதிகமாக பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மாதந்தோறும் நடாத்தப்படுகின்றன.
பணிப்பாளர் சபைத் தீர்மானங்களை எடுப்பதற்குத் தேவையான விடயங்களை உள்ளடக்கிய பட்டோலையினை பேணிவருதல்	**பணிப்பாளர் சபை பின்வரும் பொறுப்புக்களை கொண்டிருக்கின்றது:** • வுரிசை அமைச்சு மற்றும் பொதுத்திறைசேரியின் பிரதிநிதி என்றவகையில் கூட்டுத்தாபனத்தின் திருப்திகரமான செயலாற்றலை உறுதிப்படுத்தல். • **கொள்கைகள் மற்றும் உபாயங்கள்** மற்றும் அவற்றின் மீதான வெற்றிகரமான கண்காணித் தலை நிறுவுதல். • பொதுமுகாமையாளர் மற்றும் பிரதான முகாமைத்துவ உத்தியோகத்தர் குழாம் என்பவற்றை நியமித்தல், சிரேஷ்ட முகாமைத்துவத்தின் வெற்றிக்காக நிறுவனக் கட்டமைப்பை அங்கீகரித்தலும், திட்டமிடுதலும். • விளைதிறன்மிக்க உள்ளகக் கட்டுப்பாடு முறை அமுல்படுத்துவதை உறுதிப்படுத்தல். • திறைசேரி சுற்றுநிருபங்கள், பொது நிர்வாக சுற்று நிருபங்கள், வீடமைப்பு, நிர்மாண மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் நெறிப்படுத்தல்கள் ஆகியன தொடர்பில் உயர்வான நெறிமுறை மற்றும் சட்டரீதியான தராதரங்களுடன் இணங்கியிருத்தலை உறுதிசெய்தல். • பொது முகாமையாளர் மற்றும் தலைவரின் அதிகாரத்திற்கு உட்படாத வருடாந்த மிகையூதியம் மற்றும் லீவு நாள் சம்பளக் கொடுப்பனவை அங்கீகரித்தல். • சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பிரதான மூலதன முதலீடுகளைத் தீர்மானித்தல். • வருடாந்த வரவு செலவுத் திட்டம் மற்றும் கூட்டுத் திட்டத்தை அங்கீகரித்தல். • பிரசுரிப்பதற்காக வருடாந்த நிதிக் கூற்றுக்களை அங்கீகரித்தல்.
பணிப்பாளர் சபைச் செயலாளர்	கூட்டுத்தாபனத்திற்கு என செயலாளர் ஒருவர் இல்லை. தலைவரின் செயலாளர் பணிப்பாளர் சபைச் செயலாளராக கடமை புரிகின்றார். சகல சபைக் கூட்டங்களின் அறிவித்தல்களும், குறித்த சபை ஆவணங்களும் தலைவரின் அங்கீகாரத்துடன் முன்கூட்டியே ஒவ்வொருவருக்கும் கிடைக்கச் செய்வதை அவர் உறுதிப்படுத்துகின்றார். தலைவரின் மேற்பார்வையின் கீழ் கையொப்பமிடப்பட்ட சகல அமர்வுகள் மற்றும் சபைக் கூட்டங்கள், அந்தக் கூட்டங்களின் கூட்டக் குறிப்புக்களை இவர் அறிக்கையிடுகின்றார்.

சுதந்திரமான தீர்ப்புக்கள் மற்றும் சிறந்த நடைமுறைகள்	பணிப்பாளர்கள் பெறுமதி சேர்ப்பதற்கும கூட்டுத்தாபனத்தின் தீர்மானம் எடுக்கின்ற செயற்பாடுகள் தொடர்பாக சுதந்திரமான தீர்ப்புக்களை மேற்கொள்வற்கும் கடப்பாடுடையவர்களாக இருப்பதுடன் எந்தவொரு செல்வாக்கு அல்லது ஏனைய தரப்பினர்களின் கட்டுப்பாடுகள், தலையீடுகள் இன்றித் தமது கடமைகளை நிறைவேற்றுகின்றனர்.
பணிப்பாளர் சபை மற்றும் கூட்டுத்தாபனத்தின் விவகாரங்களுக்காக நியாயமான நேரம் முயற்சித்தல்	பணிப்பாளர் சபை மற்றும் கூட்டுத்தாபனத்தின் விவகாரங்களுக்குப் போதிய நேரத்தை அர்ப்பணித்து ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் போன்ற முறையான மாதாந்த சபைக் கூட்டங்களில் கலந்து கொள்வதுடன், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் கலந்துரையாடும் விடயங்கள் தொடர்பில் அறிவித்தல்.
பணிப்பாளர் சபை அமர்வுகளை முறையாக நடாத்தல்.	எல்லாப் பணிப்பாளர்களினதும் பங்கேட்பை உறுதிப்படுத்தி தலைவர் சபைக் கூட்டங்களை நடாத்துகின்றார். பணிப்பாளர் சபையானது கூட்டுத்தாபனத்தினை கட்டுப்படுத்துகின்றது.
பணிப்பாளர் சபையின் சமநிலை	பெரும்பாலான பணிப்பாளர்கள் நிறைவேற்றுத் தரத்திலல்லாத சுதந்திரமான பணிப்பாளர்கள் ஆவர். மூன்று சட்டத்தரணிகள், சிரேஷ்ட அரசாங்க அலுவலர் ஒருவர், ஒரு பொறியியலாளர், திறைசேரிப் பிரதிநிதியொருவர் ஆகியோரை உள்ளடக்கியதாக சபை காணப்படுகின்றது. கூட்டுத்தாபனம் முகம்கொடுக்கின்ற உபாய தேவையான சபை பொருத்தங்களின் அறிவு மற்றும் அனுபவத்தை பணிப்பாளர் சபை கொண்டுள்ளது என்பதை சபை நம்புகின்றது.
முகாமைத்துவ தகவல்களை போதியளவில் உரிய நேரத்திற்குள் பெற்றுக்கொள்ளல்	ஒழுங்குபடுத்தப்பட்ட முகாமைத்துவத் தகவல் முறையொன்று நடைமுறையில் உள்ளது. சபையின் அங்கத்தவர்களுக்கு குறிப்பிடப்பட்ட விவகாரங்கள் தொடர்பாக சரியான மற்றும் குறிப்பிடட் தகவல் அவர்களுக்கு முன்கூட்டியே கிடைக்கக் கூடியதாகவுள்ளது. எப்போதாவது தீர்மானம் எடுப்பதற்காக அவர்களுக்குக் கிடைக்கக் கூடியதாகவுள்ள தகவல் போதுமானதல்ல என சபை கருதுகின்றபோது அவர்கள் மேலதிக தகவலைக் கோருவதுடன் கூட்டங்களில் எடுக்கப்படுகின்ற விவகாரங்கள் தொடர்பாக எல்லாப் பணிப்பாளர்களும் முறையாக அறிவுறுத்தப்படுவதை தலைவர் உறுதிப்படுத்துகின்றார்.
பலம்மிக்க சுயாதீனமான நிறைவேற்றுத் தரமல்லாத ஆட்களைக் கொண்டதாக சபை இருத்தல்.	பெரும்பாலான பணிப்பாளர்கள் நிறைவேற்றுத் தரமல்லாத சுயாதீனமான பணிப்பாளர்கள் ஆவர்.
பணிப்பாளர் சபையின் செயலாற்றுகையை மதிப்பீடு செய்தல்	சபையின் செயலாற்றுகையை மதிப்பிடுவதற்கு செயற்பாட்டில் குறித்ததொரு முறையியல் ஒன்றுமில்லை. ஆகவே தேவையானபோது சபையின் செயற்பாட்டை மதிப்பிடுவதற்கு கீழ்க்காணும் செயற்பாடுகளின் கீழ் முக்கியமான தொழிற்பாடுகளை உள்ளடக்கிய சுயமதிப்பீட்டுப் பயிற்சியை அமுல்படுத்துவதற்குரிய பலத்தை சபை கொண்டுள்ளது. • நியதிச்சட்ட /பிரமாண ரீதியான கடமைகள் மற்றும் சபையின் பொறுப்புக்களை நிறைவேற்றுதல். • முகாமைத்துவத்தின் கூட்டிணைப்பு ஆளுகை மற்றும் கண்காணிப்பு. • உபாயமுறையில் தீர்மானம் எடுத்தல் தொடர்பான கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்களைத் தேடுதல் மற்றும் வழங்குதல். • வரிசை அமைச்சினால் நடாத்தப்படும் தொடர்ச்சியான செயன்முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள். • பொறியியலாளர்கள், CSS, கணக்காளர்கள் மற்றும் ஏனைய தேர்ச்சி பெற்ற ஊழியர்களுக்கான தொடர்ச்சியான பரவலான உத்தியோகத்தர் குழாமை உறுதி செய்வதற்குரிய தொடர்ச்சியான திட்டங்களைப் பொறுப்பேற்றல். • பணிப்பாளர் சபையினால் வணிகத்தை முகாமைத்துவம் செய்வது தொடர்பில் ஒட்டுமொத்த மீளாய்வு செய்தல்.

பொது முகாமையாளர் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தை மதிப்பிடுதல்	கூட்டுத்தாபனத்தின் கூட்டிணைப்பு இலக்குகள் மற்றும் குறிக்கோள்களிற்கு அமைய பொதுமுகாமையாளர் மற்றும் சிரேஷ்ட உத்தியோகத்தர் குழாமுக்கான நிதிசார் மற்றும் நிதிசாராத இலக்குகளையும் குறிக்கோள்களையும் பணிப்பாளர் சபை நிறுவுகின்றது. கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு முகாமைத்துவம் பொது முகாமையாளற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.
	கூட்டுத்தாபனத்தின் கூட்டிணைப்புத் திட்டத்திலிருந்து வெளிப்படுத்துகின்ற பிரதான கூட்டிணைப்பு இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் வரவு செலவுகள் பொதுமுகாமையாளர் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் தனிப்பட்ட இலக்குகளாக உருவாக்கப்படுகின்றன. அத்துடன் அவர்களது செயலாற்றல் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையினால் மதிப்பிடப்படுகின்றது.
பிரதான கொடுக்கல் வாங்கல்கள்	
கூட்டுத்தாபனத்தின் பிரதான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஒன்றித்த தேறிய சொத்துக்கள் மீதான அவற்றின் தாக்கத்தினை வெளிப்படுத்துதல்.	கூட்டுத்தாபனத்தின் பிரதான கொடுக்கள் வாங்கல்கள் மற்றும் ஒன்றுதிரட்டிய தேறிய சொத்துக்களின் மீதான அவற்றின் தாக்கம் என்பன தேவைக்கேற்ப பொருத்தமான இடங்களில் வெளிப்படுத்தப்படுகின்றன.
கணக்களிப்பொறுப்பும் கணக்காய்வும்	
நிதி அறிக்கையிடல்	
கூட்டுத்தாபனத்தின் தற்போதைய நிலைமை மற்றும் எதிர்காலம் பற்றிய வெளிப்படுத்தல்	கூட்டுத்தாபனத்தின் செயலாற்றல் குறித்து நியாயமான மதிப்பீட்டை மேற்கொள்ளக் கூடியதாக உரிய வேளையில் திறைசேரிக்கு காலாண்டு அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவம் முன்னுரிமை வழங்கிச் செயற்படுகின்றது. நிதிசார் கூற்றுக்கள் சர்வதேச கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் அமைந்த இலங்கை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றித் தயாரிக்கப்படுகின்றன. ஆகவே கூட்டுத்தாபனத்தின் நிதிசார் கூற்றுக்கள் போதியளவில் சர்வதேச கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குகின்றன.
ஆண்டறிக்கையில் தலைவரின் வெளிப்படுத்தல்களை உள்ளடக்குதல்.	தலைவரின் அறிக்கை இந்த ஆண்டறிக்கையின் 04 மற்றும் 05 ஆம் பக்கங்களில் தரப்படுகின்றது.
நிதிக் கூற்றுக்களுக்கான பணிப்பாளர்களின் பொறுப்புக்களை உள்ளடக்கிய கூற்று மற்றும் அவர்களின் அறிக்கையிடல் பொறுப்பை வெளிப்படுத்துகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கூற்று.	இந்த அறிக்கையின் 276 ஆம் பக்கத்தில் நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பற்றிய கூற்றும், 29 முதல் 39 வரையான பக்கங்களில் 2018 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையும் உள்ளடங்குகின்றது.
உள்ளக கட்டுப்பாடுகள்	
கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களை பாதுகாப்பதற்கு நிதிசார் மற்றும் செயற்பாட்டு முகாமைத்துவ இணக்கப்பாடுகளை உள்ளடக்கிய நியாயமான உள்ளக கட்டுப்பாட்டு முறையை பேணிவருதல்.	சட்டங்கள், நிதிப்பிரமாணங்கள், அமைச்சு மற்றும் திறைசேரி பணிப்புரைகள் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் மீறப்படவில்லை என்பதை உறுதிபப்டுத்துவதற்குத் திறமையான உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் இணக்கப்பாட்டு முறைமைகள் என்பவற்றை முகாமைத்துவம் நடைமுறைப்படுத்துகின்றது.
பணிப்புரை	i. பணிப்பாளர் சபையின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அமுல்படுத்துவதற்காக குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அவற்றின் வெளிப்பாடுகள் பணிப்பாளர் சபைக்கு மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளன.

	ii. செயற்பாட்டு, நிதிசார் மற்றும் ஆளணியினர் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு எல்லா பிரிவுகளின் தலைவர்கள் மற்றும் பிரதம பொறியியலாளர்களின் பங்கேட்புடன் சிரேஷ்ட உத்தியோகத்தர் குழாம் கூட்டம் மாதாந்தம் நடாத்தப்படுகின்றது. அத்துடன் இதனால் எழுகின்ற விவகாரங்கள் பணிப்பாளர் சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றன. iii. நிருமாணப் பிரிவு மற்றும் கொங்கிரீட் உற்பத்தித் தளங்களின் செயன்முன்னேற்ற கண்காணிப்பு கூட்டங்கள் எல்லா கருத்திட்ட மற்றும் கொன்க்றீட் உற்பத்தித்தள முகாமையாளர்களின் பங்கேற்புடன் ஒவ்வொரு மாதமும் நடாத்தப்படுகின்றன. அத்துடன் அதன் பெறுபேறு பணிப்பாளர் சபைக்கு அறிவிக்கப்படுகின்றது.
	கணக்காய்வுக் குழு மற்றும் கணக்காய்வாளர்
சுயாதீன நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்களை உள்ளடக்கிய கணக்காய்வு குழுவொன்று காணப்படுதல் மற்றும் அது குறித்து ஆண்டறிக்கையில் அறிக்கையிடுதல்	பணிப்பாளர் மற்றும் திறைசேரிப் பிரதிநிதியைத் தலைவராகக் கொண்டு அத்துடன் ஏனைய இரண்டு நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்களை பிரதிநிதிப்படுத்தும் ஒரு செயற்றிறன்மிக்க கணக்காய்வுக் குழு செயற்படுகின்றது. அழைப்பின் மூலம் இதன் கூட்டங்களில் கணக்காய்வாளர் அதிபதி திணைக்களத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளும் பங்கேட்கின்றனர்.
வெளிவாரி கணக்காய்வாளர்களின் குறிக்கோள்கள் மற்றும் சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு அவர்களுடன் பொருத்தமான உறவு முறையை பேணுதல்	கூட்டுத்தாபனம் வெளிவாரி கணக்காய்வாளர்கள், கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்துடன் பொருத்தமான தொடர்புகளை பேணி வருகின்றது.
பொருள் மெய்மையாய்வுச் சபை	2018.12.31 ஆந் திகதியில் உள்ளவாறு ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களினதும் இருப்புக்களினதும் மெய்மையாய்வு நடாத்தப்பட்டுள்ளது.
	கூட்டிணைப்பு ஆளுகையினை வெளிப்படுத்துதல்
கூட்டுத்தாபனத்திலுள்ள கூட்டிணைப்பு ஆளுகை நடைமுறையினை வெளிப்படுத்தல்.	கூட்டுத்தாபனத்தில் காணப்படுகின்ற சிறந்த நல்லாளுகை நடைமுறைகளைப் பலப்படுத்தவதற்காக, பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ள நல்லாளுகை வழிகாட்டல்களை அமுல்படுத்துவதற்காக கூட்டுத்தாபனம் சிறந்த கைத்தொழில் நடைமுறைகளை இனங்கண்டுள்ளது. பொதுத் திறைசேரியினால் சிபாரிசு செய்யப்பட்டுள்ள நல்லாளுகை நடைமுறைகளைப் பலப்படுத்தக்கூடிய நடைமுறைகள் ஏற்கனவே இந்தக் கூட்டுத்தாபனத்தில் நடைமுறையிலுள்ளன. பெரும்பாலான கோட்பாடுகளும் ஏற்கனவே பின்பற்றப்பட்டு வருகின்றன என்பதை இங்கு சட்டிக்காட்ட வேண்டியுள்ளது. இந்த கூட்டுத்தாபனத்தில் பின்பற்றப்பட வேண்டிய ஆனால் இதுவரை பின்பற்றப்படாதுள்ள சில நடைமுறைகள் இனம் காணப்பட்டுள்ளதுடன் அதற்கமைய திருத்துகின்ற செயற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளன. சிறந்த ஆளுகைக்கான வழிகாட்டல்களுக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திருத்தங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச நியதிச்சட்ட சபைகளின் நிறுவனக் கட்டமைப்பை முன்னேற்றும் என நம்பப்படுகின்றது.


செயற்பாட்டு மற்றும் நிதிசார் மீளாய்வு

இந்த ஆண்டறிக்கையின் ஒரு பகுதியாகத்திகழ்கின்ற கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் நிதிசார் செயலாற்றலை வெளிப்படுத்துகின்றன. செயற்பாட்டு மற்றும் நிதிசார் மீளாய்வு கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் மற்றும் நிதிசார் செயலாற்றல் மீதான மீளாய்வு பற்றிக் கலந்துரையாடுகின்றது.

கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகை

கடந்த வருடத்திற்கான புரள்வான ரூபா 2,348 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனமானது ரூபா 2,878 மில்லியன் புரள்வை பதிவு செய்தது. வருமானத்தில் ஏற்பட்ட 23% அதிகரிப்பிற்கு நிர்மாணத்தில் ஏற்பட்ட 27% அதிகரிப்பும் கொங்ரீட் தளத்தில் காணப்பட்ட 10% அதிகரிப்பும் பங்களித்திருந்தது. 2018 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனமானது வரி செலுத்துவதற்கு முன்பதாக ரூபா 18.5 மில்லியன் தேறிய இலாபத்தை ஈட்டியிருந்தது. இது கடந்த வருட வரிக்கு முன்னரான இலாபமான ரூபா 12.2 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இது குறிப்பிடக்கூடிய அதிகரிப்பாகும்.


புரள்வின் மீதான மொத்தம் இலாபமும் தேறிய இலாபமும் பற்றிய பகுப்பாய்வு



தேரிய சொத்துக்கள்




துறைசார் செயலாற்றுகை



நிர்மாணப் பிரிவு

நிருமாணச் செயற்திட்டங்களின் செயலாற்றலானது நிகழ்ச்சித்திட்டங்கள், விலைப்பட்டியல்கள் தயாரித்தல் மற்றும் சமர்ப்பிப்பதற்கான கண்டிப்பான கடைசி நேரத்துடன் நிரல்படுத்தப்படுகின்ற வளங்கள் மற்றும் அவற்றின் அத்தாட்சிப்படுத்தல் ஊடாக நிருமாண பிரிவால் நுணுக்கமாக கண்காணிக்கப்படுகின்றது. கடந்த ஆண்டுகளில் அனுபவமாக முன்னேற்ற விலைப்பட்டியலுக்கான கொடுப்பனவு தொடர்பாக நீண்டகால தாமதங்கள் இருந்தபொழுது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த புரள்வில் முக்கியமான குறைவு காணப்படுகின்றது. எவ்வாறாயினும், இக்கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் எதிர்காலத்தில் இந்த கொடுப்பனவு தாமதங்களுக்கு நிரந்தர தீர்வைக்காண வேண்டியுள்ளது.

நிர்மாண நடவடிக்கைளிலிருந்தான புரள்வு




மீளாய்வாண்டில் கருத்திட்டங்கள் மீதான அங்கீகரிக்கப்பட்ட வருமானத்தின் பெருமதியானது 217 இன் ரூபா 1,852 மில்லிளனுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் ரூபா 2,348 மில்லியனுக்கு அதிகரித்திருந்தது. கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த புரள்விற்கு 80% பங்களிப்பினை நிர்மான பிரிவு வழங்கியது. இப்பிரிவானது மீளாய்வாண்டில் வரிக்கு முந்திய தேறிய இலாபமாக ரூபா 218 மில்லியனை பெற்றுக்கொண்டது.

கொங்கீரிட் உற்பத்தித்தளம்

கூட்டுத்தாபனம் இரத்மலானை, போபிட்டிய வெரகன்தொட்ட மற்றும் மதவாச்சியில் 04 கொங்கிரீட் தளங்களையும் பேராதனையில் விற்பனை நிலையத்தையும் நிருவகித்து வருகினற்து. பிஎஸ்சி உத்திரங்கள், மின்கடத்தல் தூண்கள், ஆர்சிசி குழாய்கள், பாலங்களின் துணையுறுப்புக்கள், கற்கள், ஹொல்லோ துண்டுகள் போன்ற நானாவித உற்பத்திகளைத் தயாரிப்பதன் மூலம் இலங்கை மின்சார சபை, இலங்கை ரெயில்வே மற்றும் ஏனைய தனியார்துறை ஒப்பந்தக்காரர்கள் போன்ற வெளிவாரி வாடிக்கயாளர்களின் தேவையை கொங்கிரீட் தளங்கள் வழங்கி வருகின்றன.

கொங்கீரிட் உற்பத்தித்தளத்தின் புரள்வு



கடந்த வருடத்திற்கான புரள்வான ரூபா 321 மில்லியனுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் கொங்கீரிட் தளங்களில் இருந்து கிடைக்கப்பெற்ற பணப்புரள்வானது ரூபா 353 மில்லியன் ஆகக் காணப்பட்டதுடன் கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த புரள்வின் இது 12% பங்களிப்பினை செய்தது. இப்பிரிவு வரிக்கு முந்திய இலாபமாக ரூபா 16.0 மில்லியனை ஈட்டியிருந்தது.

வேலைச் சேவைகள் மற்றும் ஏனையன

வேலை சேவைகளின் மொத்த புரள்வு மத்திய இயந்திரப்பொறியியல் பிரிவினால் வழங்கப்பட்ட சேவைகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றது. இந்தப் பிரிவின் பிரதான நோக்கம் கூட்டுத்தாபனத்தின் தற்பொழுதுள்ள செயற்திட்டங்களுக்கு சேவைகளை வழங்குவதாகும். இதற்கு மேலதிகமாக பிரயாண போக்குவரத்து சமிக்ஞை பிரிவு மற்றும் பொலன்னறுவ மற்றும் அமித்திரிகலையிலும் இரண்டு அஸ்போல்ட் பொறித்தொகுதி அமைவிடங்கள் மத்திய இயந்திரப்பொறியியல் பிரிவின் கீழ் தொழிற்பட்டு வருகின்றன. வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு போக்குவரத்து சமிக்ஞை மின்விளக்கு முறைகளை பொருத்தி நிருவகிப்பதற்கு 2005 இல் வீதிச் சமிஞ்சை பிரிவு ஸ்தாபிக்கப்பட்டது

கடந்த வருடத்திற்கான ரூபா 118.0 மில்லியன் புரள்வுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான புரள்வு ரூபா 175.0 மில்லியனாகக் காணப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் தொழில் சேவைகள் மற்றும் ஏனையவற்றின் மூலமாக கிடைக்கப்பெற்ற பணப்புரள்வின் பங்களிப்பானது 6% ஆகும்.

2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நடைமுறையிலுள்ள செயற்திட்டங்களின் செயன்முன்னேற்றப் பொழிப்பு

செயற்திட்ட குறியீடு	செயற்திட்டம்	சேவைநாடுனர்	மீளாய்வு செய்யப்பட்ட ஒப்பந்த பெறுமதி	2018 டிசம்பர் 31 உள்ளவாறு செயன் முன்னேற்றம்	
				வருமானம் (ரூபா மில்.)	பௌதீக %
	பாலங்கள்				
1000	முவாகம பழைய உருக்கு பாலத்தை அகற்றுதல் மற்றும் தனகொலவத்தை நிர்மாணித்தல்.	ஆர்டீஏ (வீதிஅபிவிருத்திஅதிகாரசபை)	40.00	28.30	82%
1112	காலி சமகிவத்த வீதியிலுள்ள மொரகொட எல இன் குறுக்கே சமகிவத்த பாலத்தை நிர்மாணித்தல்	மேற்படி	107.00	105.00	100%
1113	திருகோணமலை வீதி மட்டகளப்பு திருக்கொண்டியடிமடு இல. 1/1 பால புணர்நிர்மாணம். (A015)	மேற்படி	185.54	161. 79	100%
1140	காலி பத்தேகம வீதியிலுள்ள மொரகொட எல இன் குறுக்கே கஹதுவாவத்த பாலத்தை நிர்மாணித்தல்	பெருநகர, மேற்கு அபிவிருத்தி அமைச்சு	54.53	47.49	100%
1154	மொரகஹகந்த களுகங்கை அபிவிருத்தியின் கீழ் திக்கல்புர ஓயவின் குறுக்கே பால நிர்மாணம்	என்எச்டீஏ (தேசியவீடமைப்புஅபிவிருத்திக் கூட்டுத்தாபனம்)		44.73	84%
1171	உடுவில மற்றும் ரம்பேவத்தைக்கு இடையே கிரிந்தி ஓயவிற்கு குறுக்கே பாலத்தை நிர்மாணித்தல்	மேற்படி	163.69	8.57	06%
1172	கடுவான கெசல்வத்தையில் ஊறுபொக்க ஓயவிற்கு குறுக்கே பாலத்தை நிர்மாணித்தல்.	மேற்படி	55.49	6.38	13%
1173	லுனகம்வெஹர ஆற்றுப் படுக்கையில் கடுகன்னாவ 6 இல் ஊறுபொக்க ஓயவிற்கு குறுக்கே பால நிர்மாணம்	மேற்படி	28.10	6.24	24%
1174	ரம்புக்வேவ பிரிவிலுள்ள வெலிகத்தர இற்கு குறுக்கே பால நிர்மணம்	மேற்படி	48.77	5.14	12%
1175	முவன்வெவ மற்றும் வீரவில்லாறு இற்கு இடையே வீரவில் ஆற்றின் குறுக்கே பால நிர்மாணம்	மேற்படி	94.26	7.27	8%
1176	அபயபுர பிரிவிற்கும் பன்னேகமுவ பிரிவிற்கும் இடையே தியபந்திய பால நிர்மாணம்	மேற்படி	99.07	7.76	09%
1177	பதிகன்தொட மற்றும் லயன்கஸ்தொட இற்கு இடையே வலவ ஆற்றினை ஊடறுத்து பால நிர்மாணம்	மேற்படி	245.71	7.88	04%
1178	தனமல் வீதியிலுள்ள ரன்மதுவேவவில் மலல ஆற்றுக்கு குறுக்கே பாலத்தை நிர்மாணித்தல்	மேற்படி	90.19	3.36	40%
1179	வலஸ்முல்ல பல்லேகந்த வீதியில் பாலத்தை நிர்மாணித்தல்	மேற்படி	83.76	4.30	06%
1180	கும்புக்குமுல்ல மெதகொட இலுள்ள ஊறுபொக்க ஓயாவில் பாலத்தை நிர்மாணித்தல்	மேற்படி	93.94	4.17	06%
1181	தலுன்ன அந்துப்பெலன சந்திக்கும் இடத்தில் பாலத்தை நிர்மாணித்தல்	மேற்படி	93.04	4.71	06%
1182	பஹல பேரகம இலுள்ள பாலத்தை அகலப்படுத்துதல்	மேற்படி	18.61	0.67	04%
1183	பதகஸ்ஸ இல் கிரிமா ஓயவிற்கு குறுக்கே பாதசாரதிகள் பாலத்தை வடிவமைத்து நிர்மாணித்தல்	மேற்படி	8.79	0.53	07%
1184	ஹதுகல கிரிமா பிரதேசத்திற்கு குறுக்கே தறுனசேவா பாலத்தை வடிவமைத்து நிர்மாணித்தல்	மேற்படி	85.76	1.85	06%
1185	கம்மலே தொடுபலவில் ஊறுபொக்க ஓயாவிற்கு குறுக்கே பாலத்தை வடிவமைத்து நிர்மாணித்தல்	மேற்படி	43.98	1.24	03%
1186	துன்தலவிற்கு குறுக்கே பாலத்தை வடிவமைத்து நிர்மாணித்தல்	மேற்படி	39.76	2.80	08%
1187	தங்காலை ஆண்கள் பாடசாலைக்காக பாதசாரதிகள் மேம்பாலத்தை வடிவமைத்து நிர்மாணித்தல்	மேற்படி	9.10	2.24	27%
1188	அங்குல்மாதுவ அரண்வெல வீதியில் கிரிமா ஓயாவிற்கு குறுக்கே பாலத்தை வடிவமைத்து நிர்மாணித்தல்	மேற்படி	97.63	2.33	03%

1158	விஜிதபுர மற்றும் தம்பேவல இற்கு இடையே கிரிந்தி ஓயாவிற்கு குறுக்கே பாலத்தை நிர்மாணித்தல்	மேற்படி	116.00	46.56	79%
1160	அல்லகல இல் கரிந்தி ஓயாவிற்கு குறுக்கே பாலத்தை நிர்மாணித்தல்	மேற்படி	139.29	60.99	50%
1161	மோதரபெலஸ்ஸ இல் கரிந்தி ஓயாவிற்கு குறுக்கே பாலத்தை நிர்மாணித்தல்	மேற்படி	205.20	60.35	29%
1162	வெலிபொதவெல – கொடதொர இன் குறுக்கே பாலத்தை நிர்மாணித்தல்	மேற்படி	55.33	19.54	39%
1163	தாலிகல மற்றும் ரிதியாகமவிற்கு இடையே வலவ ஆற்றின் குறுக்கே பாலத்தை நிர்மாணித்தல்	மேற்படி	235.61	33.89	17%
வீதிகள்					
979-982	கேகாலை மாவட்ட பொலனறுவை வீதியில் கருங்காரை வீதி அமைத்தல்.	மாவட்டச் செயலகம், கேகாலை	3900 (Approx.)	3.86	52%
1095	தலைமன்னாருக்கு அருகில் 650அ நீளமான புதிய வீதியை நிர்மாணித்தல்.	புகையிரத திணைக்களம்	17.02	17.10	88%
1141	பொல்கஹவெல – கேகாலை வீதி (4+760-6+815km)	ஆர்டீஏ (வீதிஅபிவிருத்திஅதிகாரசபை)	63.70	58.63	100%
1149	தேசிய வீதி வலைப்பின்னல் நிலச்சரிவு அனர்த்த பாதுகாப்புச் செயற்திட்டம் (LDDP) - பொதி 01	மேற்படி	2.828.54	1386.72	48%
கட்டிடங்கள்					
1088	கரமெடிய வாராந்தச் சந்தை நிர்மாணம்	மாவட்டச் செயலகம், அம்பாந்தோட்டை	44.70	13.14	35%
1097	வலசமுல்ல பேருந்து நிலையம்	-மேற்படி-	36.00	68.29	95%
1098	நீர்கொழும்பு பொது வைத்தியசாலை புனரமைப்பு	சுகாதார, சுதேசிய மருத்துவ அமைச்சு	500.00	584.17	97%
1108	லக்கல பிரதேச வைத்தியசாலைக்கான வார்ட் கட்டிடத்தொகுதி	எம்ஏஎஸ்எல் (இலங்கைமகாவலிஅதிகாரசபை)	164.11	236.82	100%
1115	இருதயநோய் சிகிச்சைப் பிரிவு புனரமைத்தல் - இலங்கை தேசிய வைத்தியசாலை	சுகாதார, சுதேசிய மருத்துவ அமைச்சு	62.40	167.86	100%
1121	சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலையில் மருத்துவ வார்ட்கள், சத்திரசிகிச்சை கூடத்திற்கான உத்தேச கட்டிடங்கள்	-மேற்படி-	94.56	48.46	54%
1123	மீரிகம வர்த்தக கட்டிடத்தினை வடிவமைத்து நிர்மாணித்து பூரணப்படுத்துதல்.	பெருநகர, மேற்கு அபிவிருத்தி அமைச்சு	76.67	46.96	61%
1098	நீர்கொழும்பு பொது வைத்தியசாலை புனரமைப்பு	சுகாதார, சுதேசிய மருத்துவ அமைச்சு	500.00	584.17	97%
1097	வலசமுல்ல பேருந்து நிலையம்	மாவட்டச் செயலகம், அம்பாந்தோட்டை	36.00	68.29	95%
1111	புனர்வாழ்வு நிலைய புனரமைத்தல் மற்றும் பண்டாரபுர நீர் சுத்திகரிப்பு நிர்மாண எஞ்சிய சிவில் வேலைகள்	என்டபிள்யூஎஸ்என்ட்டீபீ–தேசியநீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை	34.46	30.61	100%
1130	ஹொரண பகுதி 1 (கட்டம் 11) உத்தேச பேருந்து நிலையத்தினை வடிவமைத்து நிர்மாணித்தல்	பெருநகர, மேற்கு அபிவிருத்தி அமைச்சு	51.60	59.00	100%

1132	பொலன்னறுவை ரோயல் கல்லூரியின் கேட்போர்கூட நிர்மாணம்	மாவட்டச் செயலகம், பொலன்னறுவை.	106.10	116.10	100%
1134	புலத்சிங்கள சந்தையினை வடிவமைத்து நிர்மாணித்தல்	பெருநகர, மேற்கு அபிவிருத்தி அமைச்	57.47	55.47	100%
1142	பொது வைத்தியசாலை பொலன்னறுவை	சுகாதார, சுதேசிய மருத்துவ அமைச்சு	152.81	106.94	75%
1151	இ.மி.ச. பயிற்சி நிலையம் - பிலியந்தல	சீஈபீ (இலங்கை மின்சார சபை)	17.02	19.28	100%
1153	குளியாபிடிய பாதசாரதிகள் சுரங்கப்பாதை	ஆர்டீஏ (வீதிஅபிவிருத்திஅதிகாரசபை)	41.34	33.72	43%
1153	குளியாபிடிய பாதசாரதிகள் சுரங்கப்பாதை	மேற்படி	47.79	33.72	44%
	நீர் வழங்கல், நீர்ப்பாசனம் மற்றும் நீர் மின்வலு				
1109	தெல்கந்த கால்வாய் நிர்மாணம்	இலங்கை காணிச் சீர்திருத்த அபிவிருத்தி கூட்டுத்தாபனம்.	30.95	31.96	100%
1111	புனர்வாழ்வு நிலைய புனரமைத்தல் மற்றும் பண்டாரபுர நீர் சுத்திகரிப்பு நிர்மாண எஞ்சிய சிவில் வேலைகள்	என்டபிள்யூஎஸ்என்ட்டீபீ– தேசியநீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை	34.46	30.61	100%
1119	உத்தேச திஸ்ஸமஹாராம நீர் வழங்கல் முன்னேற்றத் திட்ட வேலைகளை	நகர் திட்மிடல், நீர் வழங்கல் அமைச்சு	393.00	64.44	62%
1120	மூகம்மன நீர்த்தாங்கியின் திருத்த வேலைகள் -முறைமை C	எம்ஏஎஸ்எல் (இலங்கைமகாவலிஅதிகாரசபை)	55.73	50.34	100%
1135	கிங்ஸ்லி வீவியிலுள்ள கழிவோடையினை மேம்படுத்தல்	பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு	195.16	181.38	100%
1136	மாதிவல கிழக்கு திருப்புமுனைத் திட்டம் - கட்டம் 1	-மேற்படி-	228.66	207.88	100%
1156	களுகங்கை நீரேந்துச் செயற்திட்டத்தின் இடது கரை பிரதான கால்வாய்ச் சுரங்கப்பாதை	என்டபிள்யூஎஸ்என்ட்டீபீ– தேசியநீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை		40.91	66%
1164	பொல்பிடிய சுரங்கப்பாதை	மேற்படி	19.60	29.46	100%
1167	கொடகொகொல்ல நீர் வழங்கல் திட்டம் - கட்டம் 11	மேற்படி	42.36	5.38	18%

	நானாவிதம் (ஏனையவை) **01. சேயற்திட்டங்கள்**				
1139	காலி மீன்பிடித் துறைமுகத்திற்கான இறங்குதுறை	மீன்பிடி, நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு	79.87	57.55	72%
1143	சவாரி பூங்காவின் அவுஸ்திரேலிய வலயத்திலுள்ள காணிச் சுத்திகரிப்பு, மதில் நிர்மாணம் மற்றும் உள்ளக கிரவல் வீதி நிர்மாணம்	தேசிய மிருகக் காட்சி சாலைகள் திணைக்களம்	51.86	51.87	100%
1152	உமா ஓய கீழ் நீர்த்தேக்க அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கதவு நிர்மாணம்	என்டபிள்யூஎ ஸ்என்ட்டீபீ–தேசியநீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை	44.45	14.95	34%
	02. கோங்ரீட் தளம்				
051	ரத்மலான			131.20	
052	போப்பிடிய			84.02	
053	வெரகந்தொட்ட			91.77	
812	மதவாச்சி			36.13	
	03. மதியுரைச் சேவை				
01	மதியுரைச் சேவை			8.40	
	04. இயந்திரவியல் பிரிவு				
01	போக்குவர்த்து			32.45	
02	போக்குவர்த்து ஒளி சமிஞ்சை முறை (TLS)			104.82	
03	கருங்காரை பொறித்தொகுதி			53.96	

தெல்கந்த எல



அல்லகல



பொலன்னறுவ கேட்போர்கூடம்



ஹொரண



பொலன்னறுவ வைத்தியசாலை



மனித வளங்கள்

மனித வளமானது கூட்டுத்தாபனத்தின் பிரதான சொத்தாகும். கூட்டுதத்தாபனத்தின் இலகக்குகளை அடைந்து கொள்வதற்காக மனித வளம் உள ரீதியாகவும் பௌதீக ரீதியாகவும் திருப்திப்படுத்தப்பட வேண்டும்.

தோடர்ச்சியாக மாற்றமடைந்து வருகின்ற வணிகச் சூழலில் அதன் பதவியணியினரின் ஆற்றலிலேயே எந்தவொரு நிறுவனமும் தங்கியிருக்கின்றது என்ற உண்மையைக் கூட்டுத்தாபனம் நம்புகின்றமையால் கூட்டுத்தாபனம் மனித வள அபிவிருத்தியில் முதலீடுகளைச் செய்து வருகின்றது. ஆகையால், எதிர்வுகூறப்பட்டுள்ள பெறுபேறுகளை அடைந்து கொள்ளக்கூடிய வகையில் நன்கு தேர்ச்சி பெற்ற திறன்மிக்க தொழிற்படையினை வைத்திருப்பதற்கு சகல முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன.

நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மனித வளங்களை இயக்கும் வகையில் ஊழியர்களைத் திருப்திகரமாக வைத்திருப்பதற்குரிய தரங்களை நிருவகிப்பதற்கும் அறிவு, வினைத்திறமையை அபிவிருத்தி செய்வதற்கும் 2018 ஆம் ஆண்டில் பல நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

1. **<u>பதவியணி நலன்புரி பணிகள்</u>**

   ஊழியர்களிற்காக கூட்டுத்தாபனத்தினால் அனுசரணை வழங்கப்படுகின்ற மருத்துவ காப்புறுதி திட்டம் மற்றும் வேலையாட்கள் நட்டஈட்டு காப்புறுதி திட்டம் என்பன புதுப்பிக்கப்பட்டன.

   கூட்டுத்தாபனத்தின் பதவியணியினருக்கான அனைத்து உபகாரக் கொடுப்பனவுகளும் 2017 ஏப்ரல் மற்றும் டிசம்பரில் வழங்கப்பட்டுள்ளன.

   கூட்டுத்தாபனத்தின் அனைத்து ஊழியர்களும் தமக்குத் தேவையான தளபாடங்கள் மற்றும் மின் உபகரணங்களை வாடகை கொள்வனவுத் திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ள முடியும்.

   ஆனைத்து ஊழியர்களும் முகாமைத்துவத்தினால் வழங்கப்பட்ட வருகைப் படி ஒன்றின் மூலம் நன்மையடைந்தனர். மாதந்தம் பொறியியலாளர்களிற்கு – மாதாந்தம் ரூபா 20,000 வீதம் ஏனையோருக்கு மாதாந்தம் ரூபா 7,000 வீதம்.

2. **<u>சம்பள உயர்வு</u>**

   அரசாங்க சுற்றறிக்கைக்கு அமைய சம்பந்தப்பட்ட அரச அறிவுறுத்தல்களின் பிரகாரம் அடிப்படைச் சம்பளம் அதிகரிக்கப்பட்டது.

3. **<u>சுகாதாரம் தொடர்பான பிரச்சாரங்கள்</u>**

   கூட்டுத்தாபனத்தின் இரத்மலானை வளவில் சேவையாற்றும் சகல ஊழியர்களுக்குமாக மருத்துவ முகாமொன்று (மார்பு மற்றும் கருப்பை புற்றுநோய்) இடம்பெற்றது.

4. **<u>வெளிவாரியான நிறுவனங்களுக்கு பயிற்சியளித்தல்</u>**

   நாட்டின் பொதுவாக அபிவிருத்திக்கான பங்களிப்பாக பல்கலைக்கழகங்கள் தேசிய தொழில் பயிலுநர்சபை போன்ற வெளிவாரி நிறுவனங்களினால் எமக்கு அனுப்பப்பட்ட ஆளணியினரின் முறையான பயிற்சியளித்தல் மற்றும் நிருமாணம்சார் பல்வேறு துறைகளிலும் தொடர்ந்து பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றனர்.

எமது பதவியணியிப் பலம்

பதவி	2013	2014	2015	2016	2017	2018
சிவில் பொறியியலாளர்கள்	44	40	47	56	73	73
இயந்திர மற்றும் மின்னியல் பொறியியலாளர்	12	10	10	09	09	08
சிரேஷ்ட முகாமையாள்ரகள்	03	03	03	03	03	03
கணக்காளர்கள்	08	07	05	08	08	08
ஏனைய பதவிநிலை உத்தியோகத்தர்கள்	16	14	16	17	19	18
நிருமாண அத்தியட்சகர்கள் (சிவில் / இயந்திரவியல்/ மின்னியல்)	26	23	24	28	28	22
படவரையுநர் / கனியஅளவையாளர்	02	02	04	04	03	03
பாதுகாப்பு ஊழியர்கள்	29	35	39	43	56	52
இலிகிதர் மற்றும் இணைந்த பதவிகள்	86	90	91	105	107	105
மேற்பார்வையாளர் மற்றும் ஏனைய பயிலுனர்	311	299	313	310	348	337
மொத்தம்	**537**	**523**	**552**	**583**	**654**	**629**

கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

கணக்காய்வுக் குழுவின் அறிக்கை – 2018

PED 55 ஆம் இலக்க 2010.12.14 ஆம் திகதிய அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் கணக்காய்வுக் குழுவுக்கு அதிகாரமளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நிதி அறிக்கைகயிடலானது இலங்கைக் கணக்கீட்டுத் தரநியமங்களுக்கு இசைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்றும் ஏனைய சட்டத் தேவைப்பாடுகளுக்கு இசைவாக உள்ளதா என்றும் ஏனைய உரிய ஆலோசனைகள் மற்றும் அரசாங்கத்தினால் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகளுக்கு ஏற்புடையதாக உள்ளதா என்றும் தொடர்ச்சியாக உள்ளக/வெளியக கணக்காய்வு அறிக்கைகள் மூலம் மீளாய்வு செய்து பணிப்பாளர் சபைக்கு இக்குழு பரிந்துரைகளை செய்து உதவுதல் வேண்டுமென்பதுடன் அரசாங்க தொழில்முயற்சிகள் குழு மற்றும் முகாமைத்துவக் கடிதங்களை மீளாய்வு செய்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பணிப்பாளர் சபைக்கு உதவுதல், போதியளவில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை அறிமுகம் செய்தல் மற்றும் அமுல்படுத்துவதன் மூலம் கணக்காய்வுக் குழு பணிப்பாளர் சபைக்கு உதவுகின்றது.

நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளர்கள் மூவரைக் கொண்டதாக கணக்காய்வுக் குழு காணப்படுவதுடன், இதற்கு திறைசேரியை பிரதிநிதித்துவம் செய்கின்ற பணிப்பாளர் தலைமை தாங்குகின்றார்.

மேற்கூறப்பட்ட சுற்று நிருபத்திற்கமைய தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பிரதிநிதியொருவர் அவதானிப்பாளராகப் பங்கேற்கின்றார். அத்துடன் வரிசை அமைச்சினால் நியமிக்கப்பட்ட அமைச்சின் பிரதம உள்ளக கணக்காய்வாளர் அமைச்சின் அவதானிப்பாளராக பங்கேற்கின்றார். 2018 ஆம் நிதியாண்டு காலப்பகுதியினுள் மூன்று (03) கணக்காய்வுக் குழு கூட்டங்கள் நடைப்பெற்றன.

2018 ஆம் ஆண்டில் இக் குழுவானது பின்வருவனவற்றை மேற்கொண்டது.

1. 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளிற்கான ஆண்டறிக்கைகளைத் தயாரித்துச் சமர்ப்பிப்பதற்கு கவனம் செலுத்தியமை.

2. உள்ளக கணக்காய்வு ஐயவினாக்கள், பிரச்சினைகளை உள்ளடக்கிய உள்ளகக் கணக்காய்வு புலனாய்வு அறிக்கைகள், திணைக்களத் தலைவர்களினால் வழங்கப்பட்ட பதில்கள் மற்றும் குறிப்பிடப்பட்ட குறைபாடுகளை தீர்க்கும் முகமாக முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட சீர்செய்தல் நடவடிக்கைகள் ஆகியவற்றை மீளாய்வு செய்தமை.

3. கூட்டுத்தாபனத்தின் சுமுகமான தொழிற்பாட்டை உறுதி செய்வதற்கு அவசியமான கொள்வனவுகள், களஞ்சியங்கள், வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள், செயற்திட்டச் செயற்பாடுகள், பட்டியலிடல், வாகன முகாமைத்துவம், நிதி மற்றும் மனித வளங்கள் மற்றும் திணைக்களங்களுக்கு இடையிலான சுயாதீன கொடுக்கல் வாங்கல்கள் போன்ற பல்வேறு வகையான விடயப் பரப்புக்களை உள்ளடக்கிய உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை மீளாய்வுசெய்து பொருத்தமான சிபாரிசுகள் மேற்கொள்ளப்பட்டமை.

4. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2018 இற்கான இடைக்கால அறிக்கை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு அதில் குறிப்பிடப்பட்டிருந்த கணக்கீட்டுக் குறைப்பாடுகள் மற்றும் விதிகளுடன் இணக்கமின்மைகளை சீர்செய்வதற்கு கவனம் செலுத்தியமை.

5. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு அதில் குறிப்பிடப்பட்டிருந்த கணக்கீட்டுக் குறைப்பாடுகள் மற்றும் விதிகளுடன் இணக்கமின்மைகளை சீர்செய்வதற்கு கவனம் செலுத்தியமை.

6. சம்பந்தப்பட்ட சகல விதமான விதிகள், பிரமாணங்கள் மற்றும் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட தொடர்புடைய சுற்றுநிருபங்களிலுள்ள ஏற்பாடுகள் முறையாக பின்பற்றப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்துவதற்கு கவனம் செலுத்தப்பட்டமை.

7. குழுவின் சிபாரிசுகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட முகாமையாளர்/ அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட பின்னூட்டல் நடவடிக்கைகளை மீளாய்வு செய்தமை.

8. இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் (SLFRS/LKAS) இணங்கியொழுகியிருந்தமையை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக 2017 இன் நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்தமை.

9. 2019 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தனை தயாரித்து சமர்ப்பிப்பதற்கு கவனம் செலுத்தியமை.

10. 2019 ஆம் ஆண்டிற்கான பாதீட்டைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு கவனம் செலுத்தியமை.

11. 2018 ஆம் ஆண்டிற்கான கூட்டுத் திட்டத்தனை தயாரித்து சமர்ப்பிப்பதற்கு கவனம் செலுத்தியமை.

12. அரச தொழில்முயற்சிகள் பற்றிய குழுவின் (COPE) தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டமை.

கணக்காய்வுக் குழுவின் விதிகள் நிபந்தனைகளிற்கு அமைய அனைத்துப் பொருண்மையான விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டிருந்தது என்பது கணக்காய்வுக் குழுவின் அபிப்பிராயமாகும்.

கணக்காய்வுக்குழு அங்கத்தவர்கள்

- திரு.ஜி.ஏ.அஜித் பிரியந்த - தலைவர் /சபை பணிப்பாளர்/ திறைசேரிப் பிரதிநிதி. (2018 யூன் 08 ஆந் திகதி இடம்பெற்ற 2 ஆவது கூட்டம் வரை)
- செல்வி எச்.டீ.ஆர். சுஜீவனி - தலைவர் /சபை பணிப்பாளர்/ திறைசேரிப் பிரதிநிதி. (2018 ஒக்தோபர் 17 ஆந் திகதி இடம்பெற்ற 2 ஆவது கூட்டம் முதல்)
- திரு.நந்தன மல்குமார - அங்கத்தவர் /சபை பணிப்பாளர்.
- பொறியியலாளர் வை.எம். பண்டார - அங்கத்தவர் /சபை பணிப்பாளர்.



தலைவர் - கணக்காய்வுக் குழு.

நிதிக் கூற்றுக்கள் மீதான பணிப்பாளர்களின் பொறுப்பு பற்றிய கூற்று

இக்கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பணிப்பாளர்களின் பொறுப்புக்களை கீழ்க்காணும் கூற்று எடுத்துரைக்கின்றது. இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வாளர்களின் பொறுப்புக்களிலிருந்து இவை வேறுபடுகின்றன.


நிதியாண்டின் இறுதியில் உள்ளவாறான கூட்டுத்தாபனத்தின் விவகாரங்களின் நிலைமையினையும் நிதியாண்டுக்கான கூட்டுத்தாபனத்தின் இலாபம் அல்லது நட்டத்தினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்ற விதத்தில் ஒவ்வோர் ஆண்டிற்குமான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்குமாறு பணிப்பாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கின்ற போது, பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளை தேர்ந்தெடுத்து, அவற்றை நிலையானதாக பிரயோகித்து, நியாயமான மற்றும் தீர்க்கதரிசனமான தீர்மானங்களையும் மதிப்பீடுகளையும் மேற்கொண்டு பிரயோகிக்கத்தக்க கணக்கீட்டு நியமங்களை பின்பற்றப்படுவதனை பணிப்பாளர் சபை உறுதிசெய்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதிநிலைமையின் சரியான தன்மையினை நியாயபூர்வமாக வெளிப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் போதிய கணக்குப் பதிவேடுகளை கூட்டுத்தாபனம் வைத்திருப்பதுடன் இலங்கை கணக்கீட்டு நியமங்கள், சுற்றுநிருபங்கள் மற்றும் நிதிச் சட்டத்தினூடாக திறைசேரியினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களுடன் நிதிக்கூற்றுக்கள் இணங்கியுள்ளன என்பதை உறுதிப்படுத்துதல் பணிப்பாளர்களின் பொறுப்புக்களாக காணப்படுகின்றன. கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும், தவறுகள், மோசடிகள் மற்றும் ஏனைய முறைகேடுகளைத் தடுப்பதற்கும் ஏற்புடையதான உள்ளகக் கட்டுப்பாடு முறைமைகளை நிறுவுவதற்கும் பணிப்பாளர் சபைக்கு பொறுப்புள்ளது.

கணக்குகள் தயாரிப்பில் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவினை பணிப்பாளர்கள் தொடர்ச்சியாக சேர்த்துக்கொண்டிருந்தனர். பணிப்பாளர்கள் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் கூட்டுத்தாபனம் அதன் செயற்பாடுகளில் போதிய வளங்களைக் கொண்டுள்ளது என்பதைக் கவனத்திற் கொண்டு காசோட்டம், கையிலுள்ள கருத்திட்டங்கள் மற்றும் கடன் பெறுகை வசதிகள் என்பவை உட்பட 2019 நிதியாண்டுக்காக கூட்டுத்தாபனத்தின் பாதீட்டை மீளாய்வுக்குட்படுத்தி தொடர்ந்தியங்கும் ஆற்றலை உறுதிசெய்துள்ளது.

பணிப்பாளர் சபை சார்பாக,

அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனம்



கலாநிதி ரஜீவ் ஹேரத் மீவக்கல
தலைவர்

10 ஆண்டுகளின் செயலாற்றல் பொழிப்பு

விபரம்	2009 (ரூபா)	2010 (ரூபா)	2011 (ரூபா)	2012 (ரூபா)	2013 (ரூபா)	2014 (ரூபா)	2015 (ரூபா)	2016 (ரூபா)	2017 (ரூபா)	2018 (ரூபா)
1. புரள்வு	1,466,146,925	1,671,679,005	2,564,139,185	3,534,179,480	3,565,830,370	3,466,394,952	2,429,513,031	2,102,584,401	2,348,272,403	**2,878,188,260**
2. செயற்பாட்டு செலவினம்	1,135,532,405	1,448,476,239	2,288,062,266	3,421,538,609	3,439,676,689	3,234,011,015	2,193,414,947	1,833,679,730	2,175,009,845	**2,695,978,650**
3. மொத்த இலாபம்	330,614,520	223,202,767	276,076,919	112,640,871	126,153,681	232,383,938	236,098,085	268,904,671	173,262,558	**182,209,610**
4. ஏனைய வருமானம்	27,981,723	26,062,984	32,857,265	172,380,088	199,234,550	171,015,809	176,631,024	147,891,323	171,592,907	**192,102,685**
5. நிருவாக செலவினம்	122,178,408	142,633,691	143,558,270	133,379,468	170,114,913	180,308,429	201,089,843	199,344,818	197,056,502	**199,602,006**
6. ஏனைய செலவினம்	16,418,049	3,637,713	57,476,813	22,896,549	9,582,288	22,928,839	77,026,709	104,152,652	27,828,652	**23,395,705**
7. நிதிச் செலவினம்	118,657,428	80,620,389	65,582,132	62,872,698	67,646,914	93,350,261	87,193,708	96,407,382	118,644,663	**144,776,454**
8. வரிக்கு முந்திய தேறிய இலாபம்	101,342,358	22,373,957	42,316,969	65,872,244	97,208,693	112,449,561	50,339,247	22,841,652	12,206,658	**18,523,726**
9. மொத்த சொத்து	2,626,565,287	2,443,174,386	3,558,253,858	5,115,747,833	4,892,581,938	4,374,397,115	4,223,624,771	4,472,138,666	5,110,846,002	**6,148,278,911**
10. தேறிய சொத்து	1,091,458,958	854,278,282	819,601,521	1,871,466,720	1,792,746,938	1,750,282,565	1,555,293,002	1,500,379,882	1,587,711,808	**1,555,932,204**
11. பயன்படுத்திய மூலதனம் மீதான உழைப்பு	11.1	5.5	7.2	3.6	5.89	6.85	3.5	6.71	6.43	**5.41**
12. சொத்துக்கள் மீதான உழைப்பு	3.86	0.92	1.18	1.29	1.99	2.57	1.19	0.51	2.35	**2.46**
13. மொத்த இலாப விகிதம்	23	13	10.77	3.19	3.54	6.7	9.71	12.70	7.38	**6.33**
14. தேறிய இலாப விகிதம்	7	1.34	1.64	1.86	2.73	3.2	2.0	1.1	0.52	**0.64**
15. நடைமுறை விகிதம்	1:47	1.30	1.10	1.20	1.06	1.02	1.04	1.04	1.1	**1.4**

சீஈஎன்/சீ/எஸ்டீசீசீ/01/2018/16 2019 திசெம்பர் 05

தலைவர்
அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனம்

அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்மற்றும் ஏனைய பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனத்தின் (கூட்டுத்தாபனம்) 2018 திசெம்பர் 31 இல்உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுமற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய2018 திசெம்பர்31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்,இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம்எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும்அவதானிப்புக்களும் இந்தஅறிக்கையில் காணப்படுகின்றன.அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரமான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2018 திசெம்பர் 31 இல்உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) **எல்கேஏஎஸ்-01 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்:**

ரூபா 39,388,893 தொகையான கடன்பட்டோர் செலவு மீதிகள் அத்தகைய கணக்கின் வரவு மீதிக்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்த அதேநேரம் முற்பண மீதிகளின் வரவு மீதிகள் மற்றும் ரூபா 521,242,734 தொகையான கடன்கொடுத்தோர்கள் ***எல்கேஏஎஸ்1- நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தலின்*** தேவைப்பாட்டிற்கு முரணாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அத்தகைய கணக்குகளின் செலவு மீதிகளிற்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்தது. ஆகையால், நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் முறையே ரூபா 39,388,893 மற்றும் ரூபா 521,242,743 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) ***எல்கேஏஎஸ் - 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின்*** 51 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ரூபா 17,844,731 அண்ணளவான கிரயமுள்ள முழுமையான பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் அத்தகைய சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தை மதிப்பிடாமலும் கணக்கிடாமலும் கூட்டுத்தாபனத்தால் தொடரச்சியாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

(இ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து 2015 வரை பெறப்பட்ட மதிப்பீட்டு அறிவித்தல்களின் பிரகாரம் ரூபா 338,733,800 மற்றும் ரூபா 115,003,889 தொகைகள் முறையே மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான பெறுமதி சேர் வரி (வற்) இன் செலுத்த வேண்டிய மீதிகளாகவும் பெறுமதி சேர் வரி மீதான மிகையறவீடுகளாகவும் காட்டப்பட்டிருந்தது. எனினும், வற் மீதான மிகையறவீடுகளிற்கான ஏற்பாடுகள் 2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரி மீதிக்கும் கூட்டுத்தாபனத்தால் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட விரிவான பட்டியல்களில் காட்டப்பட நேரொத்த மீதிகளிற்குமிடையில் ரூபா 4,728,291 விளக்கமளிக்கப்படாத வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(உ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலுத்த வேண்டிய வற் மீதி தேசத்தை கட்டியெழுப்பும் வரி மீதி மற்றும் அதன் மீதான தண்டப் பணக்கட்டண மீதிகளிற்கும் ஐஆர்டீ ஆல் உறுதிப்படுத்தப்பட்ட உரிய மீதிக்கும் இடையில் ரூபா 294,253,472 கூட்டுத்தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஊ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட இருப்பு மீதிக்கும் மீளாய்வாண்டிற்காக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த இருப்பு சரிபாத்தல் சுருக்கதாள்களிற்குமிடையில் ரூபா 14,665,991 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(எ) கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையால் (ஆர்டீஏ) ஒதுக்கப்பட்ட போக்குவரத்து வெளிச்ச முறைமையை ஸ்தாபிப்பது தொடர்பில் காட்டப்பட்ட பெறவேண்டிய மீதி ரூபா 57,313,904 ஆகவிருந்தது. ஆர்டீஏ இடமிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் ரூபா 81,218,448 மீதியாகவிருந்ததுடன் இது ரூபா 28,904,544 வித்தியாசத்தை காட்டுகின்றது.

(ஏ) 2015 இன் 13 ஆம் இலக்க திருத்திய பொருளாதார சேவைகள் கட்டணச் சட்டத்தின் 02 ஆம் பிரிவின் பிரகாரம் முறையே ரூபா 45,009,460 மற்றும் ரூபா 13,654,032 தொகையான பொருளாதார சேவைக் கட்டணங்கள் மற்றும் மிகை அறவீட்டுக் கட்டணங்கள் செலுத்தப்பட்டோ அல்லது 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டோ இருக்கவில்லை.

(ஐ) ரூபா 113,315,382 மொத்தத் தொகைக்குரிய பின்வரும் கணக்கு விடயங்களுடன் தொடர்புடைய விபரமான பட்டோலைகள்,வயதுப் பகுப்பாய்வு போன்ற சான்றுகள் கணக்காய்விற்குக் கிடைக்கப்பெறவில்லை. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

விடயம்		தொகை	சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்று
		ரூபா	
(i)	முன்கொண்டு வரப்பட்ட வற் மீதிகள்	11,362,032	2013 ஆம் ஆண்டிலிருந்து பட்டோலைகள் மற்றும் வயதுப் பகுப்பாய்வு
	செலுத்த வேண்டிய வற் மீதி	29,568,451	பட்டோலைகள் மற்றும் வயதுப் பகுப்பாய்வு
(ii)	நிர்மாண உத்தரவாத நிதியத்தின் கடன் மீதி	20,800,000	கடன் உடன்படிக்கை
(iii)	மீளளிக்கப்படாத வைப்புக்கள்	2,043,712	வயதுப் பகுப்பாய்வு
(iv)	கொள்வனவு முற்பணம் (பேலியகொட)	21,484,694	வயதுப் பகுப்பாய்வு
(v)	ஏனைய முற்பணங்கள்	12,757,451	வயதுப் பகுப்பாய்வு
(vi)	உப ஒப்பந்த முற்பணங்கள்	15,299,042	வயதுப் பகுப்பாய்வு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் மீதானமுகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,கூட்டுத்தாபனத்தின்தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாகதொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினைமதிப்பீடு செய்தல்,தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின்நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவாஎன்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின்உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பிலும் குறிப்பிடத்தக்கஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் காண்புகள், உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பிரதான பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆளுகைத் தரப்பினர் அறிவுறுத்தப்பட்டனர்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து,2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவிலுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு கூட்டுத்தாபனம் முறையான நிதி அறிக்கைகளை பேணியிருந்தது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவிலுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடக்கூடியனவாகும்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

  பின்பற்றப்பட்ட நடைமுறைகள்,பெறப்பட்ட சான்றுகள் மற்றும் பொருண்மையான விடயங்களின் வரையறைகளிற்கு உட்பட்டு, பின்வரும் கூற்றுக்களை தெரிவிக்கக் கூடிய அளவிற்கு வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம்,கூட்டுத்தாபனத்தினது ஆளுகைச் சபையிலுள்ள உறுப்பினர்களில் எவரேனுமொருவருக்கு கூட்டுத்தாபனத்தின் தொடர்புடைய ஏதேனும் ஒப்பந்தம் ஒன்றுடன் நேரடியான அல்லது மறைமுகமான விதத்தில் சாதாரண வணிக நிலைமையிலிருந்து விலகியதான தொடர்பு காணப்பட்டது என்றும்,

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வருவனவற்றைத் தவிர்த்து, ஏதேனும் எழுத்துருவிலான சட்டம் அல்லது கூட்டுத்தாபனத்தின் ஆளுகைச் சபையினால் வெளியிடப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட ஏற்பாடுகளிற்கு இணக்கமற்ற விதத்தில் செற்பட்டிருந்தது என்றும்.

சட்டங்கள், விதிகள் / பிரமாணங்களுக்கான தொடர்பு	**விபரம்**
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிபபிரமாணங்கள்	
(i) நிதிப்பிரமாணம் 396	ஏழு வருடங்களிற்கு மேலான ரூபா 846,280 பெறுமதியான 04 தேறப்படாத காசோலைகள் மற்றும் ஒரு வருடத்திற்கு மேலான ரூபா 212,527 பெறுமதியான இரண்டு மாற்றப்படாத காசோலைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ii) நிதிப்பிரமாணம் 156(ஆ)	சொத்துக்கள் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் அச்சொத்துக்களை முறையாக பயன்படுத்துவதற்கு பொறுப்பாகவிருக்க வேண்டும். எனினும்,கேகாலை வீடமைப்புச் செயற்திட்டங்களிற்காக பயன்படுத்தப்பட்ட ரூபா 98 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்கள் 2016 ஆம் ஆண்டிலிருந்து விளைவற்றிருந்தன.

(ஆ)	நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டல்களின் மீதான 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 அம் பந்தி	சபையால் அங்கீகரிக்கப்பட்ட நாளதுவரையாக்கப்பட்ட வருடாந்த பாதீட்டுடன்கூடிய நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வேண்டப்பட்டவாறு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம்,கூட்டுத்தாபனத்தின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளிற்கு இணங்காத விதத்தில் செயற்பட்டிருந்தது என்றும்,

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வளங்கள் காலப்பகுதியினுள் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் ஏற்புடையற்பாலான சட்டதிட்டங்களுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளன என்றும்,

3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

(i) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 22,658,412 மற்றும் ரூபா 14,257,844 கடன்பட்டோர் மீதிகளின் அறவீடு 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3 வருடங்கள் மற்றும் 5 வருடங்களிற்கு மேலாக நிலுவையாகவிருந்தமையால் சந்தேகத்திற்குரியதாகவிருந்தது. மேலும், நட்டக்கழிவிற்கான ஏற்பாடானது மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கொங்ரீட் உற்பத்திகளை வழங்குவது தொடர்பில் ரூபா 11,939,738 முற்பணங்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 வருடங்களுக்கு மேலாக தீர்க்கப்படாது நிலுவையாகவிருந்தது.

(iii) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 11 பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாண செயற்திட்டங்கள் மற்றும் இடை நிறுத்தப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் பெறப்பட்ட ரூபா 15,523,744 தொகையான ஆரம்ப முற்பணங்கள் தீர்க்கப்படாதுள்ளது. அத்தகைய முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கான சாத்தியத்தன்மை சந்தேகத்திற்குரியதாகவிருந்தது.

(iv) ரூபா 111,390,740 மற்றும் ரூபா 131,651,672 தொகையான பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் கைவிடப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பிலுள்ள மிகுதி வருமதிகள் முறையே 3 தொடக்கம் 5 வருடங்கள் மற்றும் 5 வருடங்களிற்கு மேலாக நிலுவையாகவிருந்ததுடன் அத்தகைய மீதிகளின் அறவீடு சந்தேகத்திற்குள்ளாகியிருந்தது.

(v) 2018 இன் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 31,088,182 மற்றும் 57,230,998 தொகையான உப ஒப்பந்தக்காரரிகளிடருமிருந்து பெறவேண்டிய தாமதக் கட்டணங்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 4 தொடக்கம் 6 வருடங்கள் மற்றும் 6 வருடங்களிற்கு மேலாக நிலுவையாகவிருந்தது. ஆனால், கூட்டுத்தாபனமானது அத்தகைய வருமதி மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(vi) நிர்மாண உத்தரவாத நிதியத்திடமிருந்து பெறவேண்டிய நிலுவையாகவுள்ள கடன்மீதியாக ரூபா 20,800,000 தொகை 2018 இன் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக மேற்கூறப்பட்ட கடன் மீதி தொடர்பில் 2018 இன் நிதிக்கூற்றுக்களில் ரூபா 99,127,060 செலுத்த வேண்டிய வட்டி மீதியொன்று காட்டப்பட்டிருந்தது. அத்தகைய நிலுவை மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) வழங்குனர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 903,070 தொகையான முற்பணக் கொடுப்பனவை 2018 திசெம்பர் 31 வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் 05 வருடங்களிற்கு மேலாக நிலுவையாகவிருந்தது.

(ஆ) நிதியங்களைப் பயன்படுத்துதல்

மீளாய்வாண்டின் போது ரூபா 1000 மில்லியன் கடன் இலங்கை வங்கியிடமிருந்து பெறப்பட்டிருந்தது. அந்தக் கடனில் ரூபா 432 மில்லியன் தொகையானது வங்கி மேலதிகப்பற்று மீதியின் தீர்ப்பனவிற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 273 மில்லியன் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களின் சம்பளங்களை செலுத்துவதற்கு செலவழிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக ரூபா 284 மில்லியன் தொகையானது கொங்ரீட் தளங்கள் மற்றும் நிர்மாண செயற்திட்ட வேலைகளிற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.மேற்கூறப்பட்ட கொங்ரீட் தளங்கள் மற்றும் நிர்மாணச் செயற்திட்டங்களிடமிருந்து ரூபா 584 மில்லியன் தொகையான காசுப்பாய்ச்சல் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் உண்மையாக பெறப்பட்ட வருமானமானது மீளாய்வாண்டின் போது ரூபா 123 மில்லியனாக இருந்தது.

(இ) ஆளனி முகாமைத்துவம்

(i) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 489 ஆகவிருந்த அதேநேரம் உள்ளபடியான பதவியணி 628 ஆகவிருந்தது.அதற்கிணங்க இது கூட்டுத்தாபனத்தின் பல்வேறு பதவிகளிற்கு 139 ஊழியர்களின் மிகையான ஆட்சேர்ப்பை காட்டுகின்றது

(ii) சிரேஷ்ட முகாமைத்துவத்தின் ஊழியர்களை உள்ளடக்கி நேரத்திற்கு நேரம் ஒப்பந்த அடிப்படையில் கூட்டுத்தாபனம் ஊழியர்களை வேலைக்கமர்த்தியிருந்துடன் இரண்டு உயர்மட்ட முகாமைத்துவ ஆளணிகள் மீளாய்வாண்டின் போது ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். இது கூட்டுத்தாபனத்தின் செயலாற்றலை குறிப்பிடத்தக்களவு பாதிக்கின்றது. மேலும்,அங்கீகரிக்கப்பட்ட பதவியிலுள்ள 84 வெற்றிடங்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடமாகவிருந்தது.

(iii) 737 உப ஒப்பந்த ஊழியர்கள் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு வேலைக்கமர்த்தப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டின்போது சொல்லப்பட்ட ஊழியர்களிற்காக ரூபா 232,789,955 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) செயற்பாட்டுச் செயற்திறனின்மை

(i) கூட்டுத்தாபனத்தின் வருமான இனங்காணல் கூற்றின் பிரகாரம் 15 செயற்திட்டம் தொடர்பில் 2018 இல் உள்ளவாறு ரூபா 176,424,600 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்து.

(ii) 07 பாலங்கள், 06 வீதிகள், 07 கட்டிடங்கள், 03 நீர் மற்றும் இலத்திரனியல் செயற்திட்டங்கள் மற்றும் 01 ஏனைய செயற்திட்டத்தின் உண்மையான நிதிச் செயன்முன்னேற்றத்தினை 2018 இன் இறுதியிலுள்ளவாறான இலக்கிடப்பட்ட நிதிச் செயன்முன்னேற்றத்துடன் ஒப்பிடுகையில் அது 50 சதவீதத்தை விட குறைவாகவிருந்தது.

(iii) 2018 இன் இறுதியிலுள்ளவாறு 04 பாலங்கள், 05 வீதிகள், 07 கட்டிடங்கள், 05 நீர் வழங்கல் மற்றும் நீர்ப்பாசன செயற்திட்டங்களினதும் 01 ஏனைய செயற்திட்டத்தினதும் இலக்கிடப்பட்ட பௌதீக செயன்முன்னேற்றத்துடன்ஒப்பிடுகையில் உள்ளபடியான பௌதீக செயன்முன்னேற்றமானது 50 சதவீதத்தை விட குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், இரண்டு வீதிச் செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது எந்த செயன்முன்னேற்றத்தையும் காட்டியிருக்கவில்லை.

(iv) 2017 இலிருந்து 2018 வரையான காலப்பகுதிக்காக வெளித்தரப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 10,587,000 பெறுமதியான கொங்கிரீட் உற்பத்திக் கட்டளைகள் மற்றும் ரூபா 19,833,000 பெறுமதியான உள்ளகக் கட்டளைகள் குறித்த திகதிகளில் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேற்கூறப்பட்ட கட்டளைகள் கணக்காய்வுத் திகதியான 2019 ஆகஸ்ட் வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது மேலும் அவதானிக்கப்பட்டது.

(உ) கூட்டிணைந்த திட்டமும் செயல் நடவடிக்கைத் திட்டமும்

2014 பெப்ரவரி 12 ஆந் திகதிய பீஎவ்டி/ஆரஃடீ/01/04/2014/01 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 – 2021 ஆம் ஆண்டு காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டம் மற்றும் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

ஓப்பம்: டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனம்
2018 டிசம்பர் 31 உடன் நிறைவடைந்த ஆண்டுக்கு

விரிவான வருமானக் கூற்று சகல தொகைகளும் இலங்கை ரூபாவில்	குறிப்பு	**2018**	**2017**
வருமானம்	01	2,878,188,260	2,348,272,403
விற்பனை செலவினம்	02	(2,695,978,650)	(2,175,009,845)
மொத்த இலாபம் / (நட்டம்)		**182,209,610**	**173,262,558**
ஐ வேறு வருமானம்	03	192,102,685	171,592,907
செயற்பாட்டு செலவினங்களுக்கு முன்னரான இலாபம் / (நட்டம்)		**374,312,295**	**344,855,465**
நிருவாக செலவினம்	04	(199,602,006)	(197,056,502)
விநியோக செலவினம்	05	-	-
வேறு செலவினம்	06	(23,395,705)	(27,828,652)
செயற்பாடு நடவடிக்கைகளின் பெறுபேறு		**151,314,583**	**119,970,312**
நிதி வருமானம்	07	11,985,598	10,881,009
நிதிச் செலவினம்	07	(144,776,454)	(118,644,663)
வரிக்கு முந்திய இலாபம்		**18,523,726**	**12,206,658**
வரிச் செலவினம் ஐ	08	20,969,674	13,182,175
தொட்ச்சியான செயற்பாடுகளிலிருந்தான இலாபம்		**39,493,400**	**25,388,833**
நிறுத்திய செயற்பாடுகளிலிருந்தான தேறிய இலாபம் / (நட்டம்)		-	-
ஆண்டுக்கான இலாபம்		**39,493,400**	**25,388,833**
வேறு விபரிக்கப்பட்ட வருமானங்கள்			
விளக்கமளிக்கப்பட்ட பயன்திட்டங்களின் ஆயுட்கால இலாபம் (நட்டம்)	19.01	3,742,730	5,541,247
வேறு விபரிக்கப்பட்ட வருமானம் மீதான வரி		(1,047,964)	(1,551,549)
வரி குறைத்த பின்னர் வேறு விபரிக்கப்பட்ட வருமானம்		**2,694,765**	**3,989,698**
விபரிக்கப்பட்ட மொத்த வருமானம்		**42,188,166**	**29,378,531**

பக்க இல. 42 முதல் 72 வரையான முக்கியமாக கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிக் கூ தேவையான ஒரு பகுதியாக கருதப்பட வேண்டும்.

அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனம்
2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

சகல தொகைகளும் இலங்கை ரூபாவில்	குறிப்பு	2018	2017
சொத்துக்கள்			
நடைமுறையல்லா சொத்துக்கள்			
ஆதனம், பொறி, உபகரணம்	09	1,237,026,547	1,302,611,788
அரசுக்கு உரித்தான கம்பனிகளில் முதலீடு	10	5,735,038	8,541,524
பிற்போடப்பட்ட சொத்து வரி	12	212,279,090	214,244,937
மொத்த நடைமுறையல்லா சொத்துக்கள்		**1,455,040,675**	**1,525,398,250**
நடைமுறை சொத்துக்கள்			
இருப்பு	13	306,093,752	298,995,116
ஏனைய முதலீடுகள் உட்பட வேறு உட்கட்டமைப்புக்கள்	11	72,792,766	67,526,650
வருமான வரி சொத்து	14	69,828,810	67,913,148
வர்த்தக மற்றும் வேறு பெறுகைகள்	15	3,857,682,274	2,999,095,069
காசும், காசுக்கு சமமானவையும்	16	386,840,635	151,917,768
மொத்த நடைமுறை சொத்து		**4,693,238,236**	**3,585,447,752**
மொத்த சொத்து		**6,148,278,911**	**5,110,846,002**
உரிமையாண்மையும், பொறுப்பும்			
மூலதனம், ஒதுக்கம்			
ஒதுக்கம்		16,671,650	16,671,651
மூலதன கொடை		51,140,000	51,140,000
மூலதன ஒதுக்கம்		6,629,760	6,629,760
அரச கொடை		454,413,701	524,183,174
மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்		763,088,808	763,088,808
தடுத்துவைக்கப்பட்ட இலாபம்		263,988,285	225,998,416
மொத்த உரிமை		**1,555,932,204**	**1,587,711,809**
நடைமுறையல்லா பொறுப்பு			
குத்தகை கொள்வனவு கடன் கொடுத்தோர்	17	-	12,033,333
கடனும், கடன் பெறலும்	18	1,019,374,483	20,800,000
ஓய்வுப் பயன்கள்	19	67,106,942	67,810,446
பிற்போடப்பட்ட வரி பொறுப்புக்கள்	12	154,804,191	176,691,748
மொத்த நடைமுறையல்லா சொத்துக்கள்		**1,241,285,616**	**277,335,527**
நடைமுறை சொத்து			
செலுத்த வேண்டிய வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள	20	2,861,489,603	2,318,135,887
குத்தகைக் கடன் கொடுத்தோர்	18	126,225,517	-
குத்தகைக் கடன் கொடுத்தோர்	17	12,033,333	19,487,500
வங்கி மேலதிகப் பற்று	21	351,312,638	908,175,280
மொத்த நடைமுறை பொறுப்பு		**3,351,061,091**	**3,245,798,666**
நிதி உரிமையும், பொறுப்பும்		**6,148,278,911**	**5,110,846,002**

பிரதான நிதி உத்தியோகத்தர்
2019 மே 30

நிதிக் கூற்றுக்களை தயார் செய்வதும், சமர்ப்பிப்பதும் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். பணிப்பாளர் சபை சார்பாக கைச்சாத்திடப்பட்டது.

தலைவர்
2019 மே 30

பணிப்பாளர்
2019 மே 30

பொது முகாமையாளர்
2019 மே 30

பக்க இல. 42 முதல் 72 வரையான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்குத் தேவையான ஒரு பகுதியாக கருதப்பட வேண்டும்.

அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனம்

2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கு

உரிமைத்து மாற்றங்கள் கூற்று

சகல தொகைகளும் இலங்கை ரூபாவில்

விபரம்	மூலதனம்	மூலதன கொடை	மூலதன சேர்மம்	மீள்மதிப்பீட்டு சேர்மம்	அரச கொடைகள்	தடுத்துவைத்த இலாபம் நட்டம்	மொத்த உரிமையாண்மை
2017.01.01 இல் உள்ளவாறு மீதி	**16,671,651**	**51,140,000**	**6,629,760**	**763,088,808**	**612,667,305**	**50,182,358**	**1,500,379,882**
சீராக்கல்	-	-	-	-		146,437,527	146,437,527
ஆண்டுக்கான இலாபம்						25,388,833	25,388,833
அரச கொடை					(88,484,131)		(88,484,131)
மொத்த வேறு விரிவான வருமானம்						3,989,698	3,989,698
2017.12.31 இல் உள்ளவாறு மீதி	**16,671,651**	**51,140,000**	**6,629,760**	**763,088,808**	**524,183,174**	**225,998,416**	**1,587,711,809**
முன்னைய ஆண்டுக்கான சீராக்கல்	-	-	-	-			-
2018.01.01 இல் உள்ளவாறு மீதி	**16,671,651**	**51,140,000**	**6,629,760**	**763,088,808**	**524,183,174**	**225,998,416**	**1,587,711,809**
சீராக்கல்						(4,198,297)	(4,198,297)
ஆண்டுக்கான இலாபம்						39,493,400	39,493,400
அரச கொடை					(69,769,473)		(69,769,473)
மொத்த வேறு விரிவான வருமானம்						2,694,765	2,694,765
2018.12.31 இல் உள்ளவாறு மீதி	**16,671,651**	**51,140,000**	**6,629,760**	**763,088,808**	**454,413,701**	**263,988,285**	**1,555,932,205**

பக்க இல. 42 முதல் 72 வரையான முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிக்கூற்றுக்குத் தேவையான ஒரு பகுதியாக கருதப்பட வேண்டும்.

அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனம்
2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கு

காசுப் பாய்ச்சல் கூற்று		**2018**	**2017**
சகல தொகைகளும் இலங்கை ரூபாவில்	குறிப்பு		
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்			
வரிக்கு முந்திய இலாபம்		18,523,726	12,206,658
சீராக்கல்களுக்கு			
தேய்மானம்		105,199,371	106,776,808
பதவியணி முன் கொடுப்பனவு செலவினம்			
நிச்சயிக்கப்பட்ட திட்டப் பயன்கள்		3,136,767	(14,200,000)
சொத்து, பொறி, உபகரணம் அகற்றல் (இலாபம்) நட்டம்		10,060,108	10,152,855
வெளிநாட்டு நிதிக் கடன் மீது (இலாபம்) நட்டம்		(511,887)	(1,831,037)
வியாபாரம் மற்றும் ஏனைய பெறுகைகள் தொடர்பான நட்டம்			
தொங்கட் கணக்கு வட்டி		21,952,670	26,602,192
நிதி ரீதியான செலவுகள்		-	-
ஒத்தி வைக்கப்பட்ட வருமானம்		144,776,454	118,644,663
மெதுவாக அல்லது அசையாத கையீர்ப்புகள் தொடர்பான ஏற்பாடுகள்		(89,269,473)	(88,484,131)
நிதி ரீதியான வருமானம்		(2,915,957)	(2,047,898)
செயற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தெழிற்பாட்டு இலாபம்.'. நட்டம்		(11,985,598)	(10,881,009)
		198,966,183	**156,939,101**
ஏனைய பெறுகைகள் மற்றும் வியாபாரத்தில் அதிகரிப்பு அல்லது குறைவு		(9,260,938)	7,936,848
கொள்வனவுகள் மற்றும் உப ஒப்பந்த கொடுப்பனவுகள் அதிகரிப்பு அல்லது குறை		(820,449,725)	(376,955,200)
கடன்கள் மற்றும் முட்கொடுப்பனவுகள் அதிகரிப்பு அல்லது குறைவு		(36,734,241)	(72,235,755)
வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்துகையில் அதிகரிப்பு அல்லது குறைவு		174,297,407	133,816,868
(பயன்படுத்தப்பட்ட),தொழிற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட பணம்		325,043,171	189,921,778
		(168,138,143)	**39,423,640**
நிதிச்செலவு செலுத்தப்பட்டது.			
செலுத்தப்பட்ட பணிக்கொடை		(123,684,317)	(126,667,407)
செலுத்தப்பட்டட்ட வரி		(7,020,882)	(3,720,110)
தொழீற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான தேரிய காசோட்டம்		(1,915,662)	(885,170)
		(300,759,004)	**(91,849,046)**
முதலீட்டு செயற்பாடுகளில் இருந்தான காசோட்டம்			
சொத்து,பொறித்தொகுதி,உபகரணங்கள் கையகப்படுத்துகை			
சொத்துக்கள் பொறித்தொகுதி உபகரணங்களை விற்பனை செய்த இலாபங்கள்		(20,976,568)	22,815,236
நிரந்தர வைப்புகள் முதலீடுகள்		1,494,386	2,447,480
பெறப்பட்ட நிதி ரீதியான வருமானம்		(5,266,115)	(4,931,067)
முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்தான தேரிய காசோட்டம்		11,980,310	10,760,334
		(12,767,988)	**31,091,983**
நிதி ரீதியான செயற்பாடுகளில் இருந்தான காசோட்டம்			
கடன்கள் மற்றும் பெறுகைகள் ஆகியவற்றை மீளசெலுத்தியது			
கடன் பெறுகைகளில் இருந்தான இலாபம்		(15,200,000)	-
நிதி ரீதியான குத்தகைகள் மீள்செலுத்துகை		1,140,000,000	-
நிதி ரீதியான செயற்பாடுகளில் இருந்தான தேரிய காசோட்டம்		(19,487,500)	(7,454,167)
		1,105,312,500	**(7,454,167)**
பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவைகளில் இருந்தான தேரிய அதிகரிப்பு (குறை		**791,785,508**	**(68,211,230)**
வருட ஆரம்பத்திலிருந்த பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவைகள்		**(756,257,511)**	(688,046,282)
வருட இறுதியில் பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவைகள்	16	**35,527,997**	**(756,257,512)**

பக்க இல. 42 முதல் 72 வரையான முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்குத் தேவையான ஒரு பகுதியாக கருதப்பட வேண்டும்.

கூட்டிணைப்புத் தகவல்

1.1 பொதுவானவை

1957 இன் 49 ஆம் இலக்க கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் உருவாகக்ப்பட்டுள்ள அரச அபிவிருத்தி நிருமாணக் கூட்டுத்தாபனம் இலங்கையில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டுள்ளது. இந்தக் கூட்டுத்தாபனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமும் வியாபாரத்தின் பிரதான இடமும் இரதம்லான, பொருப்பன வீதி, இல. 07 இல் அமைந்துள்ளது. நிருமாண செயற்பாடுகளின் பிரதான இடங்கள் பேலியகொடை மற்றும் பேராதனை ஆகிய இரண்டு பிரதம பொறியியலாளர் அலுவலகங்களுக்கு பன்முகப்படுத்தப்பட்டுள்ளதுடன் முன் வலுவூட்டப்பட்ட கொங்கிரீட் உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்களின் பிரதான இடங்கள் இரத்மலான, போபிட்டிய,வேரகந்தொட்டை மற்றும் மதவாச்சியிலும் அமைந்துள்ளன.

1.2 ஒப்பீட்டுத் தகவல்

கடந்த ஆண்டில் பயன்படுத்திக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் இந்த ஆண்டிலும் மாற்றமின்றிப் பிரயோகிக்கப்பட்டுள்ளன. அத்துடன் முன்னைய ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்ட ஒரு சில தரவுகள் மற்றும் புள்ளிவிபரங்கள் தகுந்தவாறு மீண்டும் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

1.3 பிரதான வணிகச் செயற்பாடுகள்

நிருமாண ஒப்பந்தங்கள், நிருமாண தேவைகளுக்காக முன்வலுவூட்டப்பட்ட கொங்கிரீட் பொருட்களை உற்பத்தி செய்தல், முன்வலுவூட்டப்பட்ட கொங்கிரீட் உற்பத்திக்கான ஒப்பந்தங்கள், கொங்கிரீட் விற்பனை செய்தல் பணிகளைப் பொறுப்பேற்றல் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்காக போக்குவரத்து வீதிச் சமிஞ்சை விளக்குகளை நிர்மாணித்தல் மற்றும் பராமரித்தல் போன்றன இக்கூட்டுத்தாபனத்தின் பிரதான வணிகச் செயற்பாடுகளாகும்.

1.4 ஊழியர்களின் எண்ணிக்கை

வருட முடிவில் நிறுவன ஊழியர்களின் எண்ணிக்கை 629 ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களை வழங்குவதற்கு அதிகாரமுடைய திகதி

நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கு 2018 மே மாதம் 25 திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

2. முக்கியத்துவம் வாய்ந்த கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

2.1 பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

2.1.1 தயாரிப்பின் அடிப்படை

நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, காசோட்டக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் போன்றவற்றை அரச அபிவிருத்தி நிருமாணக் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்கள் உள்ளடக்குகின்றன. இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLFRS / LKAS) மற்றும் இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளுக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளன.

முன்னர் அறிவிக்கப்பட்ட நிதிசார் நிலைமைகள், நிதிச் செயலாற்றல்கள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் காசுப் பாய்ச்சல்கள் மீதான SLFRS / LKAS இற்கான மாற்றத்தின் விளைவு நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்பில் தரப்பட்டுள்ளது.

நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பில் சேர்க்கப்பட்டுள்ள பிரதான கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே தரப்படுகினற்ன. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டாலன்றி கொள்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எல்லா ஆண்டுகளுக்கும் நிலையானதாக பிரயோகிக்கப்பட்டுள்ளன.

2.1.2 அந்நியச் செலாவணி பரிமாற்றம்

எல்லா அந்நியச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களும், கொடுக்கல் வாங்கல் நடைபெறுகின்ற சந்தர்ப்பத்தில் நிலவிய நாணய மாற்று விகிதங்களில் பரிமாற்று நாணயமாக அறிவிக்கப்படுகின்ற இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டுகின்றன. நிதிசாராத சொத்துக்களும் பொறுப்புக்களும் பெறுமதிகள்

தீர்மானிக்கப்படுகையில் காணப்பட்ட நாணய விகிதங்களைப் பயன்படுத்தி மாற்றப்படுகின்றன. தீர்க்கப்படாத நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களின் மீள்மாற்றம் தொடர்பாக எழுகின்ற நாணய மாற்ற வேறுபாடுகள், வெளிநாட்டு செயற்பாட்டில் தேறிய முதலீட்டின் நட்டம் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்வதற்குத் தகைமை பெறுகின்ற வெளிநாட்டு நாணய கடன்பெறுகைகள் தவிர உடனடியாக இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. இச்சந்தர்ப்பத்தில் நாணயமாற்று வேறுபாடுகள் ஏனைய பரவலான வருமானத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. அத்துடன் வெளிநாட்டு செயற்பாட்டின் மீள்மாற்றம் தொடர்பாக எழுகின்ற நாணயமாற்று வேறுபாடுகளுடன் வெளிநாட்டு நாணய மாற்றல் திரட்டப்படுகின்றது.

2.1.3 சம்பந்தப்பட்ட தரப்பினருடனான உறவுகள்

இந்தக் கூட்டுத்தாபனம் கடந்த ஆண்டில் மாஸ்ட்டிரஸட் ஹோல்டிங்ஸ் லிமிடெட் கம்பனியுடன் ஒரு கூட்டுத்தொழில் முயற்சி உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு, புஜிமா ஸ்டேட் கோப்ரேசன் (பிரைவேட்) லிமிடெட் கம்பனியுடன் ஒரு துணை நிறுவன உறவு முறையை உருவாக்கியுள்ளது. நடைமுறை சிக்கல் காரணமாக அதனுடன் தொடர்புடைய ஒன்றித்த கணக்குகள் தயாரிக்கப்படததுடன் துணைக் கம்பனியிலான முதலீடு கிரயத்தில் பதிவுசெய்யப்படுகின்றது.

2.1.4 வரியியல்

(அ) நடப்பாண்டு வரி

வருமான வரிக்கான ஏற்பாடு நிதிசார் கூற்றுக்களில் அறிவிக்கப்பட்டவாறு வருமான மற்றும் செலவு அடிப்படையைக் கொண்டு நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டுள்ளது. அத்துடன் 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கு அமைய இது கணக்கிடப்பட்டுள்ளது.

(ஆ) பிற்போடப்பட்ட வரி

நிதி அறிக்கையிடல் நோக்கம் மற்றும் வரி நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்ட கணக்குகளுக்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முன்னெடுத்துச் செல்கின்ற தொகைகளுக்கிடையில் தற்காலிக வேறுபாடுகளுக்காக வழங்கப்படுகின்ற பொறுப்பு முறையைப் பயன்படுத்தி பிற்போட்ட வரிக்கு ஏற்பாடு செய்யப்படுகின்றது. தீர்க்கப்படுகின்ற பொறுப்பை மீள அறவிடுகையில், அறிக்கையிடப்படுகின்ற திகதியிலுள்ள சட்டங்களின் அடிப்படையில் தற்காலிக மாற்றங்களுக்கு பிரயோகிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற வரி வீதத்தில் பிற்போட்ட வரி அறவிடப்படுகின்றது.

பயன்படுத்த முடியுமான நேர மாற்றத்திற்கு எதிரிடையாக எதிர்கால வரி விதிக்கக் கூடியதாகவுள்ள இலாபங்கள் கிடைக்கக்கூடிய அளவுக்கு பிற்போட்ட வரிச் சொத்துக்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. பிற்போட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிவிக்கப்படுகின்ற திகதியிலும் மீள்நோக்கப்படுகின்றன. கூட்டுத்தாபனத்தின் நிருமாண செயற்பாடுகள் மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்காக அத்தகைய செயற்பாடுகளுக்குப் பொருத்தமான வித்தியாசமான வரி விகிதங்கள் காரணமாக பிற்போட்ட வரி பிரத்தியேகமாக கணக்கிடப்படுகின்றது.

கூட்டுத்தாபனத்தின் நிர்மாணச் செயற்பாடுகள் மற்றும் ஏனைய செயற்பாடுகளிற்கு வேறுபட்ட வரி வீதங்களைப் பிரயோகிக்க வேண்டியிருப்பதனால் அவற்றிற்கான பிற்போட்ட வரி வெவ்வேறாக கணிப்பிடப்படுகின்றது.

பிற்போட்ட வரிகள் வரி விதிக்கக்கூடியதான அதே நிறுவனத்திற்கும் அதே வரிவிதிப்பு அதிகாரத் தரிப்பிற்கும் தொடர்புடையதாகக் காணப்படுகையில் நடைமுறை வரிப் பொறுப்புக்களுக்கு எதிராக நடைமுறை வரி சொத்துக்களிற்கு எதிராக எதிரீடு செய்வதற்கு தற்பொழுதுள்ள சட்டங்கள் இடமளிக்குமாயின் பிற்போட்ட வரிச் சொத்துக்கள் பிற்போட்ட வரிப் பொறுப்புக்களிற்கு எதிராக எதிரீடு செய்யப்படுகின்றன.

2.1.5 கடன்பெறுதல் கிரயம்

பாவனைக்கு அல்லது விற்பனைக்கு தயார்படுத்துவதற்கு அத்தியாவசிய ரீதியில் கணிசமான ஒரு காலப்பகுதியை நுகர்கின்ற ஒரு சொத்தின் கொள்வனவு, நிர்மாணம் அல்லது உற்பத்தி தொடர்பில் அதற்கு நேரடியாக சேரக்கூடிய கடன்பெறும் கிரயங்கள் அந்தந்தச் சொத்துக்களின் கிரயத்தின் பாகமாக மூலதனப்படுத்தப்படுகின்றன. ஏனைய சகல கடன்பெறும் கிரயங்களும் அவை ஏற்பட்ட

காலப்பகுதியில் லெவினமாகக் கொள்ளப்படுகின்றது. நிதிகளை கடனாகக் பெறுவது தொடர்பில் ஒரு நிறுவனத்திற்கு ஏற்படுகின்ற வட்டிகள் மற்றும் ஏனைய கிரயங்கள் கடன்பெறும் கிரயத்தில் உள்ளடக்கப்படும்.

2.2 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை மதிப்பிடுதலும் அவற்றை அளவிடும் அடிப்படைகளும்

2.2.1 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

கிரயமும் பெறுமதியடலும்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் போன்ற அனைத்துச் சொத்துக்களும் ஆரம்பமாக கிரயத்தில் பதிவுசெய்யப்படுகின்றன. ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கிரயமானது அவற்றின் உத்தேசிக்கப்பட்ட பாவனைக்காக அவற்றை தொழிற்படுகின்ற நிலைமைக்குக் கொண்டு வருவதில் செலவிடப்பட்ட ஏதேனும் செலவினங்களுடன் கொள்வனவு அல்லது நிருமாணக் கிரயங்களுமாகும். கிரயத்திலுள்ள ஓர் சொத்தின் ஆரம்ப அங்கீகாரத்தின் பயனாக ஏதேனும் பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டும் ஏனைய சொத்துக்கள் மீள்மதிப்பிடப்பட்ட தொகைகளிலும் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. ஏனைய எல்லா ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் திரட்டிய பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்ட தொகையில் மற்றும் அல்லது பெறுமதிக் குறைப்பு நட்டங்களில் குறிப்பிடப்படுகின்றன. ஏதேனும் சொத்து பொறித்தொகுதி மற்றும் உபகரணம் பல்வேறு பாவனைக் காலத்தைக் கொண்டு, பாரிய துணைப் பாகங்களை உள்ளடக்குகின்றபோது அவை பிரத்தியேகமாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்ற தனிப்பட்ட விடயமாக கணக்கிடப்படுகின்றன.

தொடர்ந்தேற்படுகின்ற செலவினம்

பாரிய பார்வையிடல் மற்றும் முழுமையான செலவினம் உட்பட பிரத்தியேகமாக கணக்கிடப்படுகின்ற ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பாகங்களை பதிலீடு செய்வதற்குச் செலவிடப்பட்ட செலவினம் மூலதனமாக்கப்படுகின்றது. ஏனைய தொடர்ந்துவரும் செலவினம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் எதிர்கால பொருளாதார நலன்கள் அதிகரிக்கப்படுகின்ற போது மாத்திரம் மூலதனமாக்கப்படுகின்றது. அசலாக மதிப்பிடப்பட்டுள்ள செயற்பாட்டு தரங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட வருங்கால பொருளாதார நலன்களை புதுப்பிக்கின்ற போது அல்லது பராமரிக்கக்கூடிய வகையில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் திருத்தங்கள் அல்லது பராமரிப்பின் பேரில் செலவிடப்பட்ட ஏனைய எல்லா செலவினமும் ஒரு செலவாக அங்கீகரிக்கப்படுகின்றது.

மீள்மதிப்பீடு

ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படிகள் பின்னர் மீள் மதிப்பீடு செய்யப்படும் போது ஏற்படும் மீள் மதிப்பீட்டு மிகை, அந்தச் சொத்துக்கள் முன்னர் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட வீழ்ச்சியை எதிர்ப்பதிவு செய்யும் அளவு நீங்கலாக பிற முற்றுமடங்கிய வருமானம் மற்றும் திரண்ட உரிமையாண்மையில் மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்தில் அங்கீகரிக்கப்படுவதுடன், அச் சந்தர்ப்பத்தில், அந்த அதிகரிப்பானது வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும். மீள் மதிப்பீட்டு வீழ்ச்சியானது, அதே சொத்திற்காக மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் உள்ள மிகையினை எதிரீடு செய்யும் அளவு நீங்கலாக வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும். மீள்மதிப்பீட்டுத் திகதியில் திரண்ட பெறுமானத் தேய்மானம் சொத்தின் மொத்த முன்கொணரற் தொகைக்கு எதிராக நீக்கப்படுவதுடன், நிகரத் தொகை சொத்தின் மீள் மதிப்பீட்டுத் தொகையாக திருத்திக் கூறப்படும். விற்பனை செய்யப்படும் போது, குறித்த சொத்துடன் தொடர்புபட்ட மீள்மதிப்பு ஒதுக்கம் எதுவுமிருப்பின், அது நிறுத்தி வைத்த இலாபத்திற்கு மாற்றப்படும்.

மதிப்பிறக்கம்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் முன்னெடுத்துச் செல்கின்ற பெறுமதி வருடாந்தம் மதிப்பிறக்கத்திற்காக மீளாய்வுசெய்யப்படுகின்றன அல்லது நிகழ்வுகள் அல்லது மாற்றங்களின் போது முன்னெடுத்துச் செல்கின்ற பெறுமதி அறவிடப்படுவதில்லை எனக் குறிப்பிடப்படுகின்றது. தற்பொழுதுள்ள குறிப்பிடப்பட்ட ஏதேனும் மற்றும் முன்னெடுத்துச் செல்கின்ற பெறுமதி மதிப்பிடப்பட்ட மீள் அறவிடப்படுகின்ற தொகையை அதிகரிக்கின்ற போது, சொத்துக்கள் மீள் அறவிடக்கூடிய தொகைக்கு மதிப்பிறக்கம் செய்யப்படுகினற்ன. இதே சொத்துக்காக முன்னைய மீள்மதிப்பீட்டு மேலதிகம் பின்னடைகின்ற வரை மதிப்பிறக்க இழப்புக்கள் முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

பெறுமானத் தேய்வு
இறையில் காணியைத் தவிர ஏனைய எல்லா ஆதனம், பொறி மற்றும் உபகரணமும் அவற்றைக் குறைத்தெழுதுவதற்காக அவற்றின் பயனளிக்கும் பாவனைக்காலம் முழுவதற்கும் நேர்கோட்டு முறையில் கீழ்க்கண்டவாறு பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றன. சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பாவனைக்காலம் வருமாறு.

சொத்தின் வகை	**ஆண்டுகள்**
காணி	முடிவில்லா ஆயுட்காலம்
கட்டடங்கள்	20 வருடத்திற்கு மேல்
அலுவலக உபகரணம்	10 வருடத்திற்கு மேல்
பொறித்தொகுதியும் இயந்திரசாதனமும்	10 வருடத்திற்கு மேல்
மோட்டார் வாகனங்கள	05 வருடத்திற்கு மேல்
ஏனைய சொத்துக்கள்	10 வருடத்திற்கு மேல்

ஒரு சொத்தின் பெறுமானத்தேய்வு விகிதம், பாவனைக்காலம் அல்லது மீதியான பெறுமதியில் முக்கியமான மாற்றத்தினைக் கொண்டுள்ளது எனக் குறிப்பிடப்படுமாயின், அந்தச் சொத்தின் பெறுமானத்தேய்வு புதிய எதிர்பார்ப்புக்களை பிரதிபலிக்கும் உத்தேசத்துடன் திருத்தங்கள் செய்யப்படுகின்றன.

இனங்காணாதிருத்தல்

ஒரு சொத்தின், ஒரு பொறித்தொகுதியின், ஒரு உபகரணத்தின் கொணரப்படும் தொகையானது அகற்றலின் அல்லது அந்தச்சொத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நன்மைகள் ஏதுமில்லை என்பதன் பேரில் இனங்காணாமல் விட்டுவிடப்படுகின்றது. ஒரு சொத்தின், ஒரு உபகரணத்தின், ஒரு பொறித்தொகுதியின் இனங்காணாது விட்டு விடுவதிலிருந்து எழும் இலாபம் அல்லது நட்டம் அத்தகைய சொத்து இனங்காணாது விட்டுவிடப்படும் போது இலாப அல்லது நட்டக் கணக்கில் உள்ளடக்கப்படுகின்றது.

2.2.2 குத்தகை

அ) நிதிக் குத்தகை

கூட்டுத்தாபனத்துக்கு கணிசமான எல்லா இடர்பாடு மற்றும் நலன்களையும் திறமையாக மாற்றுவதற்காக நிதிக்குத்தகை ஆதனம், பொறி மற்றும் உபகரணம் குத்தகைக்கு விடப்பட்ட உருப்படியின் சடுதியான உரிமை மாற்றத்திற்குரிய இவ்வுருப்படிகள் காசு விலையில் மூலதனமாக்கப்படுகின்றன. அத்துடன் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் எனத் தெரிவிக்கப்பட்டு குத்தகைக்கு விடப்பட்டுள்ள சொத்துக்களின் உபயோகத்திலிருந்து கூட்டுத்தாபனம் இக்காலப்பகுதிக்குள் பெறுமானத்தேய்வை கணக்கிட்டு நன்மை பயக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. குத்தகை காலத்தின் மூலம் செலுத்த வேண்டிய வட்டி தொங்கற் கணக்கிலுள்ள வட்டிக்கு மாற்றப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிதி ஆண்டு தொடர்பான வாடகைக் கடமைப்பாடுகளின் வட்டி கூறு குத்தகை காலத்தின் மீது பரவலான வருமானக் கூற்றிற்கு கட்டணம் அறவிடப்படுகின்றது.

உள்ளக இலாப விகிதத்தைப் (IRR) பயன்படுத்தி கணக்கிடப்படுகின்ற இவ்வாண்டுக்கு ஏற்புடைய வட்டியானது முற்றுமடங்கிய வருமானக் கூற்றுக்கு சாட்டப்படுகின்றது.

உரிய பகுதியைக் கொண்டிருப்பதாயின், குத்தகை சொத்து மீதான மேம்படுத்தல் செலவு மூலதனமயமாக்கப்படுகின்றது. ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் குத்தகை மேம்பாடாக வெளியிடப்பட்டுள்ளதுடன் மேம்பாடுகளின் மதிப்பிடப்பட்டுள்ள உபயோக காலத்தின்போது பெறுமானத்தேய்வு கணக்கிடப்பட்டுள்ளது.

ஆ) செயற்பாட்டு குத்தகைகள்

செயற்பாட்டு குத்தகை என்பது குத்தகைக் காலத்திற்குள் குத்தகையாளர் சகல உரிமைகளையும் ஆபத்துக்களையும் தன்னிடம் வைத்திருப்பதேயாகும்.

செயற்பாட்டு குத்தகை அடிப்படையில் செலுத்தப்படும் வாடகைகள் வருமானக் கூற்றில் செலவாக நேர்கோட்டு முறையில் காட்டப்படுகினற்து.

2.2.3 நிதிக் கருவிகள்

1. நிதிசார் சொத்துக்கள்

ஆரம்ப இனங்காணலும் அளவீடும்.

நிதிசார்ந்த சொத்துக்கள் LKAS 39 என்ற நியமத்தின் நோக்கெல்லையினுள் பொருத்தமான வாறு விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய நிதிசார்ந்த சொத்துக்கள், முதிர்ச்சி முதலீடுகளுக்காக வைக்கப்பட்டவைகள், கடன்கள் மற்றும் வருமதிகள், இலாபம் அல்லது நட்டம் என்பவற்றினூடாக நியாயவிலைப் பெறுமானத்தில் நிதிசார்ந்த சொத்துக்களாக வகைப்படுத்தப்படுகின்றன. நிதிசார்ந்த சொத்துக்களின் வகைப்படுத்தல் ஆரம்ப இனங்காணலில் நிர்ணயிக்கப்படுகின்றது.

நிதிசார்ந்த சகல சொத்துக்களும் நியாயவிலைப் பெறுமான அதிகரிப்பில் இனங்காணப்படுகின்றன. முதலீடுகளாகவிருக்கின்ற பட்சத்தில், இலாபம் அல்லது நட்டத்திலன்றி நேரடியாக பகிரக்கூடிய கொடுக்கல்வாங்கல் கிரயங்கள் என்பவற்றினூடாக நியாயவிலைப் பெறுமானத்தில் இனங்காணப்படுவதில்லை.

காசு மற்றும் குறுங்கால வைப்புகள், வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் மற்றும் ஏனைய நிதிசார்ந்த சொத்துக்கள் என்பன நிதிசார்ந்த சொத்துக்களில் உள்ளடங்குகின்றன.

தொடர்ந்துவரும் அளவீடு

நிதிசார்ந்த சொத்துக்களின் பின் தொடந்துவரும் அளவீடு அவற்றின் வகைப்படுத்தலில் தங்கியிருக்கும். அத்தகையவைகள் பின்வருமாறு:

அ) இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியிலுள்ள நிதிசார் சொத்துக்கள்

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியிலுள்ள நிதிசார் சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் ஆரம்ப இனங்காணல் மீது நிச்சயிக்கப்பட்ட மற்றும் விற்பனைக்காக வைத்திருக்கப்பட்டுள்ள நிதிசார் சொத்துக்களை உள்ளடக்குகின்றது. கிட்டிய காலத்தில் விற்பனை செய்வதற்கு அல்லது மீள் கொள்வனவு செய்கின்ற நோக்கத்திற்காக அவை ஈட்டப்பட்டிருக்குமாயின் அவ்வாறான நிதிசார் சொத்துக்கள் விற்பனைக்காக வைத்திருக்கப்பட்டுள்ளவையாக வகைப்படுத்தப்படுகின்றன.

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியிலுள்ள நிதிசார் சொத்துக்கள் விரிவான வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ள மாற்றங்களுடன் கூடிய நியாயமான பெறுமதியில் நிதிசார் நிலைமை கூற்றில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியிலுள்ள நிதிசார் சொத்துக்கள் மீதான தேறிய இலாபங்கள் அல்லது தேறிய நட்டங்கள் நாணயமாற்று வேறுபாடுகள், வட்டி மற்றும் பங்கிலாப வருமானம் எனபவற்றை உள்ளடக்குகின்றது.

ஆ) கடன்கள் மற்றும் பெறவேண்டியவை

காத்திரமான ஒரு சந்தையில் குறிப்பீடு செய்யப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கக்கூடிய கொடுப்பனவுகளையுடைய பாராதீனப்படுத்த முடியாத நிதிசார்ந்த சொத்துக்கள் கடன்களும் மற்றும் வருமதிகளும் ஆகும். ஆரம்ப அளவீட்டின் பின்னர், அத்தகைய நிதிசார்ந்த சொத்துக்கள் அதனைத் தொடர்ந்து குறைந்த நட்டம் தொடர்பான தாக்கமுள்ள வட்டி வீத முறையினைப் (EIR) பயன்படுத்தி கிரயம் கழிக்கப்பட்டு மதிப்பிடப்படுகின்றன. கழிக்கப்பட்ட கிரயமானது அந்த EIR முறையில் இன்றியமையாத ஒரு பாகமாக விளங்குகின்ற கட்டணங்கள் அல்லது கிரயங்கள், கொள்வனவு என்பவற்றின் அடிப்படையில் ஏதாவது கழிவினை அல்லது தவணைக் கட்டணத்தை கணக்கிலெடுப்பதன் மூலம் கணிப்பிடப்படுகின்றது. EIR கழிவு முறையானது இலாபம் அல்லது நட்டத்திலுள்ள நிதிவருமானத்தில் உள்ளடங்கியிருக்கும். பாதிப்புகளிலிருந்து ஏற்படுகின்ற நட்டங்கள் இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன. குறுகிய காலத்தில் பெறவேண்டியவை கிரயத்தில் அளவிடப்படுகின்றன.

பதவியணி கடன்கள்

பதவியணி கடன்கள் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை கூற்றில் கடன் மற்றும் பெற வேண்டியவைகளின் கீழ் நிதிச் சொத்துக்களாக கவனத்திற் கொள்ளப்படுகின்றன. உத்தியோகத்தர் கடன்கள் வழங்கப்படுகின்ற திகதியில் நிலவுகின்ற சந்தை வட்டி விகிதங்களைப் பயன்படுத்தி நியாய பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றன. நியாய பெறுமதி மற்றும் கடன் தொகைக்கிடையிலான வித்தியாசம்

கடன் விதிகள் மீது வட்டியடன் கடன் தவணையைக் கொண்டுள்ளது. சந்தை வட்டி விகிதத்தைப் பயன்படுத்தி வட்டி வருமானம் திரட்டப்படுகின்றது.

வியாபாரப் பெறவேண்டியவை

LKAS 39 இன் கீழ் "கடன்கள் மற்றும் பெறவேண்டியவை" என்ற வகையின் கீழ் வருகின்ற வழங்கப்பட்ட அல்லது பெறப்பட்டவையாக கருதப்படுகின்ற நிருமான கடன்பட்டோர், பிடிகாசு, பெறவேண்டிய தாமதக் கட்டணங்கள், மற்றும் கொங்கிறீட் தளங்களின் கடன்பட்டோர் என்பவற்றை கூட்டுத்தாபனத்தின் வியாபார பெறவேண்டியவை உள்ளடக்குகின்றது. கடன்பட்டோர் மீதான நட்டக்கடன் ஏற்பாடு அக்கடன்பட்டோரின் கடந்தகால காசு செலுத்தித் தீர்க்கும் முறை, செலுத்தத் தவறிய விகிதம் என்பவற்றின் அடிப்படையில் ஒவ்வோர் அறிக்கையிடும் காலத்தின் இறுதியிலும் கணிப்பிடப்பட்டு, நட்டக்கடன் நட்டம் / (மேலதிகம்) விரிவான வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

(இ) முதிர்ச்சிவரை வைத்திருக்கப்படும் முதலீடுகள்

கூட்டுத்தாபனம் சாத்தியான உத்தேச மற்றும் முதிர்ச்சிவரையுள்ள முதலீட்டை வைத்திருக்கின்ற ஆற்றல் பெறுகின்ற போது, நிலையான அல்லது தீர்மானிக்கப்படுகின்ற கொடுப்பனவுகளுடன் மூலத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்படாத நிதிசார் சொத்துக்கள் மற்றும் நிலையான முதிர்வடைதல் போன்றவை முதிர்ச்சிவரை வைத்திருக்கப்படும் முதலீடுகளாக வகுக்கப்படுகின்றன. ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், முதிர்ச்சிவரை வைத்திருக்கப்படும் முதலீடுகளின் பெறுமதிகள், நட்டக்கழிவைக் கழித்து தாக்கமுள்ள வட்டி விகித முறையைப் பயன்படுத்தி காலத்தேய்மானக் கிரயத்தில் மதிப்பிடப்படுகின்றன. முதிர்ச்சிவரை வைத்திருக்கப்படும் முதலீடுகளாக அடையாளம் காணப்படாதவிடத்து அல்லது மதிப்பு குறைக்கப்படுகின்றபோது இலாபங்களும் நட்டங்களும் விரிவான வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

இ) விற்பனைக்கு காணப்படுகின்ற நிதிசார் முதலீடுகள்

உரிமைத்துவமும் கடன் பிணைப்பத்திரங்களும் விற்பனைக்காகக் கிடைக்கக்கூடிய நிதிசார்ந்த முதலீடுகளில் உள்ளடங்கியிருக்கும். விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாக வகைப்படுத்தப்படும் உரிமைத்துவம் சார்ந்த முதலீடுகள் இலாபத்தினூடாக அல்லது நட்டத்தினூடாக நியாய விலைப் பெறுமானத்தில் வர்த்தக நோக்கத்திற்காக வகைப்படுத்தப்பட்டு ஒதுக்கப்படாத அல்லது குறித்தொதுக்கப்படாத அத்தகையவைகளாகும். சந்தை நிலைமைகளில் காணப்படும் மாற்றங்களுக்குப் பதிலீடாக அல்லது ஒழித்துக்கட்டுவதற்குரிய தேவைகளுக்கான பதிலீடாக விற்பனை செய்யப்படலாம் என்பவைகள் மற்றும் நிச்சயமற்ற ஒரு காலப்பகுதிற்கு ஒதுக்கி வைப்பதற்கு எதிர்பார்க்கப்படுபவைகள் இந்த வகுதியிலுள்ள கடன் பிணைப்பத்திரங்களாகும்.

ஆரம்ப இனங்காணலின் பின்னர், விற்பனைக்காகக் கிடைக்கக்கூடிய நிதிசார்ந்த முதலீடுகள் அதனைத் தொடர்ந்து ஏனைய தொழிற்படு வருமானத் தில் இனங்காணப்படுகின்ற திரண்ட இலாப அல்லது நட்ட காலப்பகுதியில் அத்தகைய முதலீடு இனங்காணாது விட்டுவிடப்படும் வரை விற்பனைக்காகக் கிடைக்கக்கூடிய ஒதுக்கத்தில் ஏனைய முழுமையான வருமானமாக மாறாத இலாபங்களுடன் அல்லது நட்டங்களுடன் நியாய விலைப் பெறுமானத்தில் அளவிடப்படுகின்றன அல்லது நட்டமாக இருக்க வேண்டும் என நிர்ணயிக்கப்படுகின்றன. அவ்வாறான நேரத்தில் திரண்ட நட்டம் நிதிசார்ந்த ஆகுசெலவில் வருமானக் கூற்றுக்கு வகைப்படுத்தப்பட்டு, விற்பனைக்காகக் கிடைக்கக்கூடிய ஒதுக்கத்திலிருந்து அகற்றப்படுகின்றது. விற்பனைக்காகக் கிடைக்கக்கூடிய பிணையுத்தர வாதங்களின் பேரிலானவட்டி வருமானம் நடைமுறையிலுள்ள வட்டி முறையியலைப் பயன்படுத்தி கணிப்பிடப்படுவதோடு, இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணவும்படுகின்றது. ஏனைய விரிவான வருமானத்தில் முன்னர் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒன்று திரட்டிய இலாபம் அல்லது நட்டம் நிதிசார் சொத்து அடையாளம் காணப்படாதவிடத்து உரிமைத்துவத்திலிருந்து விரிவான வருமானக் கூற்றுக்கு மீள் வகுக்கப்படுகின்றது.

இனங்காணாதிருத்தல்

காலாவதியாகிய சொத்துக்களிலிருந்து காசுப் பாய்ச்சல்களைப் பெறுவதற்கான உரிமைகள் இருக்கின்ற போதும் அல்லது அத்தகைய சொத்திலிருந்து வரும் காசுப்பாய்ச்சல்களைப் பெறுவதற்கான தனது உரிமைகளை மாற்றிக்கொடுத்துள்ளது அல்லது `ஒரு பாரப்படுத்தலுடனான' ஏற்பாட்டின் கீழ், பொருண்மையான தாமதமின்றி, தனக்குக் கிடைத்த காசுப்பாய்ச்சல்களை முழுமையாக செலுத்துவதற்கான ஒரு கடப்பாட்டைப் பொறுப்பேற்றுள்ளது எனும் போதும், கூட்டுத்தாபனம் ஒரு நிதிச்சொத்தை இனங்காணாதிருக்கின்றது. கூட்டுத்தாபனத்தினால் உருவாக்கப்படுகின்ற அல்லது தடுத்து வைக்கப்பட்ட ஏதேனும் மாற்றத்திலுள்ள நிதிசார் சொத்துக்களின் வட்டி ஒரு பிரதியேகமான சொத்து அல்லது பொறுப்பாக அங்கீகரிக்கப்படுகிறது.

நிதிச் சொத்துக்களின் பெறுமதி குறைவடைதல்

நிதிசார்ந்த ஒரு சொத்தின் பெறுமதி குறைந்துள்ளமைக்கு ஏதாவதொரு தெளிவான சான்று காணப்படுகின்றதா என நிர்ணயித்துக்கொள்ளும் பொருட்டு அறிக்கையிடப்படும் ஒவ்வொரு திகதியிலும் கூட்டுத்தாபனம் அத்தகைய சொத்தை மதிப்பிடும். நிதிசார்ந்த ஒரு சொத்தின் பெறுமதி குறைந்துள்ளது என ஊகிக்கப்படும், மற்றும் சொத்தின் ஆரம்ப இனங்காணலின் பின்னர் நிகழ்ந்த ஒன்று அல்லது அதற்கு அதிகமான நிகழ்வுகளின் விளைவாக பெறுமதி குறைந்துள்ளது என்பதற்கான தெளிவான ஒரு சான்று காணப்படும் பட்சத்தில் மாத்திரம், அந்த நிதி சார்ந்த சொத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் மீது ஒரு தாக்கத்தைக் கொண்டுள்ள அந்த நட்டத்தை நம்பத்தகுந்தளவில் மதிப்பிடலாம். பெறுமதிக்குறைவு நட்டம் விரிவான வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றது.

2. நிதிசார் பொறுப்புக்கள்

ஆரம்ப அங்கீகாரமும் அளவீடும்

நிதிசார்ந்த பொறுப்புக்கள் LKAS 39 என்ற கணக்கீட்டு நியமத்தின் நோக்கெல்லையினுள் வருகின்ற நிதி சார்ந்த பொறுப்புக்கள், கூட்டுத்தாபனம் நிதிசார் பத்திரத்தின் ஒப்பந்த ரீதியான சரத்துக்களுக்கு ஒரு தரப்பினராக இருக்கின்ற போது மாத்திரம் அங்கீகரிக்கப்படுகின்றன.

நிதிசார்ந்த சகல பொறுப்புக்களும் ஆரம்பத்தில் நியாயப் பெறுமானத்தில் இனங்காணப்படுகின்றன. கடன்கள் மற்றும் கடன் பெறுகைகள், ஏனைய நிதிசார்ந்த பொறுப்புக்கள் என்பவற்றை பொறுத்தவரையில் கழிக்கப்பட்ட கிரயத்தில் இனங்காணப்படுகின்றன. நேரடியாக சேரக்கூடிய கொடுக்கல்வாங்கல் கிரயங்களை இது உள்ளடக்குகின்றது.

வியாபார மற்றும் ஏனைய கொடுமதிகள், கடன்களும் பெறுகைகளும், வங்கிமேலதிகப் பற்றுக்கள் என்பன அறிக்கையிடப்படும் திகதிற்கான கூட்டுத்ததபனத்தின் நிதிசார்ந்த பொறுப்பில் உள்ளடங்கும்.

தொடர்ந்து வரும் அளவீடு

நிதி சார்ந்த பொறுப்புக்களின் அளவீடு பின்வருமாறு அவற்றின் வகுதியில் தங்கியிருக்கும்.

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியிலுள்ள நிதிசார் பொறுப்புக்கள்

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியிலுள்ள நிதிசார் பொறுப்புக்கள், இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் ஆரம்ப இனங்காணல் மீது நிச்சயிக்கப்பட்ட மற்றும் விற்பனைக்காக வைத்திருக்கப்பட்டுள்ள நிதிசார் பொறுப்புக்களை உள்ளடக்குகின்றது.

கிட்டிய காலத்தில் விற்பனை செய்யும் நோக்கத்திற்காக அவை ஈட்டப்பட்டிருக்குமாயின் அவ்வாறான நிதிசார் பொறுப்புக்கள் விற்பனைக்காக வைத்திருக்கப்பட்டுள்ளவையாக வகைப்படுத்தப்படுவதுடன் இலாபம் அல்லது நட்டம் விரிவான வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

கடன்கள், கடன் பெறுகைகள் மற்றும் ஏனைய நிதிசார் பொறுப்புக்கள்

ஆரம்ப இனங்காணலின் பின்னர், வட்டியை சுமந்து வருகின்ற கடன்கள் மற்றும் கடன் பெறுகைகள் என்பன அதனைத் தொடர்ந்து தாக்கமுள்ள வட்டி வீத முறையியலைப் பிரயோகித்து காலத்தேய்மானக் கிரயத்தில் அளவிடப்படுகின்ற இலாபங்கள் மற்றும் நட்டங்கள் என்பன வருமானக்கூற்றில் இனங்காணப்படுகின்ற அதே நேரம் பொறுப்புக்கள் தாக்கமுள்ள வட்டி வீத முறையியல் (EIR) காலத்தேய்மன படிமுறையினூடாக இனங்காணப்படுகின்றன. குாலத்தேய்மானக் கிரயம் EIR முறையின் இன்றியமையாத பாகமாக விளங்ககின்ற ஏதாவது கழிவீட்டு அல்லது கொள்வனவு மீதான தவணைக்கட்டணம் மற்றும் கட்டணங்கள் அல்லது கிரயங்கள் என்பவற்றைக்கருத்திற் கொள்வதன் மூலம் கணிப்பிடப்படுகின்றது. EIR காலத்தேய்மானம், விரிவான வருமானக் கூற்றிலுள்ள நிதிக் கிரயத்தில் உள்ளடக்கப்படுகின்றது.

வியாபார மற்றும் செலுத்த வேண்டியவை, முற்பணங்கள் மற்றும் வைப்புக்கள் மற்றும் திரட்டியவை போன்ற கூட்டுத்தாபனத்தின் குறுகிய தவணை பொறுப்புக்கள் கிரயத்தில் அளவிடப்படுகின்றன.

இனங்காணாதிருத்தல்

கடப்பாடு விடுவிக்கப்படும் அல்லது நீக்கப்படும் அல்லது காலாவதியாகும் போது நிதிசார்ந்த ஒரு பொறுப்பு இனங்காணாமல் விட்டுவிடப்படுகின்றது. ஏற்கெனவேயிருக்கின்ற நிதிசார்ந்த ஒரு பொறுப்பு கணிசமான வித்தியாசமான அளவுகளில் அதே கடன் கொடுத்த தரப்பிட மிருந்து மற்றொரு தரப்பினால் அல்லது ஏற்கெனவேயிருக்கின்ற ஒரு பொறுப்பின் அளவுகளில் பிரதியிடப்படுகின்ற போது அத்தகையவைகள் மாற்றத்திற்கு உட்படுத்தப்படு கின்றன. அத்தகைய ஒரு மாற்றம் அல்லது திருத்தம் ஆரம்ப பொறுப்பில் இனங்காணாது விட்டுவிடப்படும் ஒரு செயலாக கருதப்படும். புதிய ஒரு பொறுப்பின் இனங்காணல் மற்றும் அந்தந்த கொணரப்படும் தொகைகளிலுள்ள வித்தியாசம் என்பன வருமானக் கூற்றில் இனங்காணாது விட்டுவிடப்படுகின்றன. அத்துடன், தொடர்புடைய வேறுபாடுகள் விரிவான வருமானக் கூறிறல் இனங்காணப்படுகின்றது.

3. நிதிசார் கருவிகளின் நியாய பெறுமதி

ஒவ்வொரு அறிக்கையிடப்படுகின்ற திகதியிலும் செயற்திறன்மிக்க சந்தைகளில் வியாபாரம் செய்யப்படுகின்ற நிதிசார் கருவிகளின் நியாய பெறுமதி குறிப்பிடப்பட்ட சந்தை விலைகளுக்கு அல்லது வணிகரின் கூறு விலைகளின் மூலம் தீர்மானிக்கப்படுகின்றது. செயற்திறன் மிக்க சந்தை ஒன்றில் வியாபாரம் செய்யப்படாத நிதிசார் ஆவணங்களுக்காக பொருத்தமான மதிப்பீட்டு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நியாய பெறுமதி தீர்மானிக்கப்படுகின்றது. அத்தகைய தொழில்நுட்பங்கள் சமீபத்திய கைக்கு எட்டிய தூர சந்தை கொடுக்கல் வாங்கல்களைப் பயன்படுத்தி உட்படுத்தப்படலாம். கழிவிடப்பட்ட காசுப் பாய்ச்சல் பகுப்பாய்வு அல்லது ஏனைய மதிப்பீடு மாதிரிகள், மற்றுமொர் கருவியின் நடைமுறை நியாய பெறுமதிக்கு கணிசமான அளவு ஒரே மாதிரியானதாகும்.

2.2.3 சொத்துக்களின் மதிப்பிறக்கம்

ஒவ்வொரு அறிவிக்கப்படுகின்ற திகதியிலும் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஏனைய சொத்துக்கள் மற்றும் முதலீடுகள் மதிப்பிறக்கத்திற்கு உள்ளாகியுள்ளமைக்கு ஏதேனும் அறிகுறி காணப்படுகின்றதா என்பதைத் தீர்மானிப்பதற்கு அவை மீளாய்விற்கு உட்படுத்தப்படுகின்றன. சாத்தியமான மதிப்பிறக்கம் காணப்படுமாயின், ஏதேனும் பாதிக்கப்பட்ட சொத்தின் மீள அறிவிடத்தக்க தொகை அதன் முன்னெடுத்துச் செல்கின்ற தொகையுடன் மதிப்பிடப்பட்டு ஒப்பிடப்படுகின்றது. மதிப்பிடப்பட்ட மீள அறவிடக்கூடிய தொகை குறைவானதாயின் மதிப்பிறக்க நட்டம் உடனடியாக விரிவான வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. அவ்வாறே ஒவ்வொரு அறிவிக்கப்படுகின்ற திகதியிலும் பொருட்பட்டியலின் ஒவ்வொரு பொருளுக்குமுரிய முன்னெடுத்துச் செல்கின்ற தொகையுடன் ஒப்பீடு செய்வதன்மூலம் மதிப்பிறக்கத்திற்காக அதன் விற்பனை விலையுடன் செலவுகளைக் கழித்துப் பூர்த்தி செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் மதிப்பிடப்படுகின்றன. பொருட்பட்டியலின் ஒரு விடயம் மதிப்பிறக்கம் செய்யப்பட்டு பூர்த்தி செய்து விற்பனை செய்வதற்கு அதன் முன்டுத்துச் செல்கின்ற தொகையிலிருந்து செலவுகள் கழிக்கப்பட்டு விற்பனை செய்வதற்கு குறைக்கப்படுகின்றது. அத்துடன் ஒரு மதிப்பிறக்க நட்டம் விரிவான வருமானக் கூற்றில் உடனடியாக அங்கீகரிக்கப்படுகின்றது.

மதிப்பிறக்க நட்டம் தொடர்ந்து பின்னடைவுடையதாக இருப்பின், சொத்தின் முன்னெடுத்துச் செல்கின்ற தொகை அதன் மீள அறவிடக்கூடிய தொகைக்கு திருத்தப்பட்ட மதிப்பீட்டுக்கு அதிகரிக்கப்படுகின்றது. ஆனால், கடந்த ஆண்டுகளில் சொத்துக்காக மதிப்பிறக்க நட்டம் அங்கீகரிக்கப்படாதிருந்து தீர்மானிக்கப்படவுள்ள தொகையின் மேலதிகத்தைக் கொண்டிருப்பதில்லை. மதிப்பிறக்க நட்டத்தின் பின்னடைவு விரிவான வருமானக் கூற்றில் உடனடியாக அங்கீகரிக்கப்படுகின்றது.

2.2.4 முதலீடுகள்

அ) நடைமுறை முதலீடுகள்

நடைமுறை முதலீடுகள் கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன. அது சுவீகரித்தல், தரகு கட்டணம், தீர்வைகள் மற்றும் வங்கி கடட்ணம் போன்ற கிரயங்களை உள்ளடக்குகின்றது.

நடைமுறை முதலீடுகள் தொடர்பான தேறப்படாத இலாபங்கள் மற்றும் நட்டங்கள் சந்தைப் பெறுமதியில் எடுக்கப்படுகின்றன. அதாவது கிரயம் மற்றும் சந்தைப் பெறுமதி ஆகியவற்றில் குறைவான பெறுமதியில் நடைமுறை முதலீடுகளை பிரதிபலிகசச் செய்வதற்குத் தேவையான சந்தைப் பெறுமதிக்கு குறைத்தல் மற்றும் அத்தகைய குறைப்புக்களின் பின்னடைவுகள் விரிவான வருமானக் கூற்றுக்கு வரவு வைக்கப்படுகின்றது அல்லது சாட்டுதல் செய்யப்படுகின்றது.

ஆ) இணைக் கம்பனி முதலீடுகள்

இணைக்கம்பனிகளில் செய்யப்பட்டுள்ள முதலீடுகள் உரிமை அடிப்படையில் கணிக்கப்படுகின்றன. கம்பனிக்கு வழங்கக் கூடியதான இதன் மூலம் கிடைக்கும் இலாபத்தின் பங்கு வருமானமாகக் கணிக்கப்படுவதுடன் முதலீட்டுத் தொகையுடன் (இது ஆரம்பத்தில் செலவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது) இதற்குச் சமனான தொகை சீராக்கல் செய்யப்படுகின்றது.

2.2.6 இருப்புக்கள்

நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பொருட்கள் மீதான உரிமையில் முக்கியத்துவம் வாய்ந்த இடர்களும் நலன்களும் காணப்படுமாயின் கூட்டுத்தாபனத்தினால் இருப்புக்கள் அங்கீகரிக்கப்படுகின்றது. இருப்புக்கள், கிரயம் மற்றும் தேறிய தேறக்கூடிய பெறுமானம் ஆகிய இரண்டிலும் குறைந்த பெறுமானத்தில் கணிக்கப்படுகின்றன. சாதாரண வர்த்தக நடவடிக்கையில் மதிப்பிடப்பட்ட விற்பனை விலையிலிருந்து அதனைப் பூர்த்தியாக்குவதற்கு மதிப்பிடப்பட்ட கிரயம் மற்றும் மதிப்பிடப்பட்ட விற்பனைக் கிரயங்களை கழிக்க வருவதே தேறிய தேறத்தக்க பெறுமானமாகும். ஒவ்வொரு பொருளையும் அது இருக்கின்ற இடத்திற்குக் கொண்டுவருவதற்கு ஏற்பட்ட கிரயங்கள் மற்றும் அவற்றின் நிலைமை பின்வருவனவற்றின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகின்றன.

மூலப் பொருட்கள்	-	முதலில் வந்தவை முதலில் செல்லல் என்ற உண்மைக் கிரய அடிப்படையில்.
முடிவுப் பொருட்கள் - கொங்கிரீட் உற்பத்திகள்	-	உண்மைக் கிரயத்தில்
நடைமுறை வேலை	-	சாதாரண செயற்பாட்டு இயலளவின் மீதான நேர்ப் பொருட்கள், நேர்க் கூலிகள், நிலையான உற்பத்தி மேந்தலைகளின் பொருத்தமான பகிர்வின் அடிப்படையில்.
நுகரக்கூடியவையும் உதிரிப்பாகங்களும்	-	முதலில் வந்தவை முதலில் செல்லல் என்ற உண்மைக் கிரய அடிப்படையில்.

2.2.7 காசு மற்றும் காசுக்குச் சமனானவை

காசு மற்றும் காசுக்குச் சமனானவை என்பது கையிலுள்ள காசு, கேள்வி வைப்புக்கள் மற்றும் உயர் திரவத்தன்மை முதலீடுகள், உடனடியாக காசாக மாற்றக்கூடிய தொகைகள் ஆகும். அத்துடன் பெறுமதி மாற்றங்களில் முக்கியத்துவமற்ற இடர்பாடுகளுக்கு உட்பட்டதாகும்.

காசுப் பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக காசு மற்றும் காசுக்குச் சமனானவை என்பது கையிலுள்ள காசு மற்றும் வங்கி மேலதிகப்பற்றைக் கழித்து வரும் தேறிய வங்கி மீதியை உள்ளடக்குகின்றது. கைக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைவான காலத்தில் முதிர்வடையக்கூடிய குறுங்கால முதலீடுகளும் காசும் காசுக்குச் சமனானவையாகவும் கருதப்படுகின்றன.

2.2.8 வாடிக்கையாளரிடமிருந்து கிடைக்க வேண்டிய மற்றும் வாடிக்கையாளருக்குச் செலுத்த வேண்டியவற்றை அங்கீகரித்தல்

ஒப்பந்த வேலைக்காக வாடிக்கையாளரிடமிருந்து கிடைக்க வேண்டிய மொத்தத் தொகை பின்வருவனவற்றின தேறிய தொகையாகும்.

அ) அங்கீகரிக்கப்பட்ட இலாபம் அடங்கலாக ஏற்பட்ட கிரயம்: அதிலிருந்து

ஆ) அங்கீகரிக்கப்பட்ட நட்டங்கள் மற்றும் நடைமுறையிலுள்ள விலைப்பட்டியல்களைக் கழித்து வரும் தொகை

நடைமுறையிலுள்ள எல்லா ஒப்பந்தங்களுக்கும் நடைமுறை கட்டணப்பட்டியலிருந்து செலவிடப்பட்ட செலவுகளை மீறுகின்றபோது அங்கீகரிக்கப்பட்ட இலாபமாகும்.

ஒப்பந்த வேலைக்காக வாடிக்கையாளரிடமிருந்து கிடைக்க வேண்டிய மொத்தத் தொகை பின்வருவனவற்றின தேறிய தொகையாகும்.

(அ)அங்கீகரிக்கப்பட்ட இலாபம் அடங்கலாக ஏற்பட்ட கிரயம்: அதிலிருந்து

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட நட்டங்கள் மற்றும் நடைமுறையிலுள்ள விலைப்பட்டியல்களைக் கழித்து வரும் தொகை

நடைமுறையிலுள்ள எல்லா ஒப்பந்தங்களுக்கும் நடைமுறை கட்டணப்பட்டியலிருந்து செலவிடப்பட்ட செலவுகளை மீறுகின்றபோது அங்கீகரிக்கப்பட்ட இலாபமாகும்.

2.3 பொறுப்புக்களும் ஒதுக்கங்களும்

பொருளாதார நலன்களைச் சேரக்கினற் வளங்களின் எதிர்கால காசு வெளியேற்றத்தின் பெறுபேறாக கடந்த நிகழ்விலிருந்து தற்போதைய கடப்பாடுகள் எழுகின்ற போது நிதிசார் நிலைமைக் கூற்றில் பொறுப்புக்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. கடன்கொடுத்தோரின் வேண்டுகோளை செலுத்த வேண்டிய நிலுவைகள் அல்லது அறிக்கையிடப்படும் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டிய பொறுப்புக்கள் நிதிசார் நிலைமை கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களாக கருதப்படுகின்றன. ஆறிக்கையிடப்படுகின்ற திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குப் பின்னர் செலுத்த வேண்டிய பொறுப்புக்கள் நிதிசார் நிலைமைக் கூற்றில் நடைமுறையற்ற பொறுப்புக்களாகக் கருதப்படுகின்றன.

கடந்த நிகழ்வின் பெறுபேறாக கூட்டுத்தாபனம் சட்ட ரீதியான அல்லது கண்டிப்பான கடப்பாடுகளைக் கொண்டுள்ள போதும், பொறுப்புக்களைச் செலுத்த வேண்டுமென்ற நம்பகமான மதிப்பீடு காணப்பட்டு பொருளாதார நலன்களின் வெளிப்பாய்ச்சல் காணப்படுமிடத்தும் நிதிசார் நிலைமைக் கூற்றில் ஓர் ஏற்பாடு அங்கீகரிக்கப்படுகின்றது.

2.3.1 ஓய்வூதிய நலக் கடப்பாடுகள்

அ) வரையறைத்த நலத் திட்டம் - பணிக்கொடை

பணிக்கொடை என்பது ஊழியநலத் திட்டமொன்று என வரையறுக்கப்படுகின்றது. கூட்டுத்தாபனம் குறிப்பிட்ட விதிமுறைகளுக்கமைய பணிக்கொடையைச் செலுத்துவதற்கான கடப்பாட்டைக் கொண்டுள்ளது. இந்தப் பொறுப்பை எதிர்கொள்ளும் வகையில் LKAS 19 இல் குறிப்பிடப்பட்டுள்ள சூத்திரத்தினைப் பயன்படுத்தி கணிப்பீடு செய்யப்பட்ட தொகைக்குச் சமனானதோர் தொகை நிதிநிலமைக் கூற்றில் ஒரு ஏற்பாடாக முன்னெடுத்துச் செல்லப்படுகினற்து

ஆ) வரையறுத்த பங்களிப்புத் திட்டம்- ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி
குறிப்பிட்ட விதிமுறைகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைய ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிக்குத் தகுதி பெறுகின்றனர்.

2.4. வருமானம்

2.4.1 வருமான அங்கீகாரம்
கூட்டுத்தாபனத்திற்கு பொருளாதார நலன்கள் உட்பாய்ச்சப்படுவதற்கான வாய்ப்பின் அளவுக்கு வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது. வருமானத்திற்காக செலவிடப்பட்ட அல்லது செலவிடப்படவுள்ள இணைந்த செலவுகள் நம்பகரமாக அளவிடப்பட்டு வழங்கப்பட்ட சேவைகள் அல்லது பொருட்களின் முக்கியமான இடர்பாடுகள் மற்றும் வெகுமதிகள் மாற்றப்பட்டதன் பின்னர் வாடிக்கையாளர்களுக்கு அச்செலவினம் மாற்றப்பட்டுள்ளது. அத்துடன் வெளிப்படுத்தல் தொடர்பில் தற்போது கடடுப்பாடு காணப்படவில்லை. பெற்றுக் கொள்ளப்பட்ட அல்லது பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய தேறிய வியாபார கழிவுகள் மற்றும் விற்பனை வரிகள் கவனத்திற் கொள்ளப்பட்டு நியாய பெறுமதியில் வருமானம் அளவிடப்படுகின்றது. கீழ்க்காணும் கருதுகோள்கள் வருமான அங்கீகார நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

அ) நிருமாண வருமானம்
நிருமாண ஒப்பந்தத்திலிருந்து கிடைக்கின்ற வருமானம் LKAS 11 இற்கமைய பூரணப்படுத்தல் விகிதாசார முறையில் அங்கீகரிகக்ப்படுகின்றது.

மதிப்பிடப்பட்ட மொத்த ஒப்பந்த செலவுகளைக் கொண்டு இன்றுவரை நிறைவேற்றப்பட்ட வேலைக்காகச் செலவிடப்பட்ட ஒப்பந்த செலவுகளின் பகுதியின் அடிப்படையில் ஒப்பந்தம் பூரணப்படுத்தல் கட்டம் தீர்மானிக்கப்படுகின்றது.

ஆ) பொருட்களின் விற்பனை

கூட்டுத்தாபனத்திலிருந்து பொருட்களின் உரிமைத்துவமும் முக்கியத்துவம் வாய்ந்த இடர்பாடுகளும் கொள்வனவாளருக்கு மாற்றப்படுகையில் இலாபங்கள் ஈட்டப்படுகின்ற போது பொருட்களின் விற்பனையிலிருந்து வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது. இது பொதுவாக உரிமைத்துவத்துடன் இணைந்த அளவுக்கு முகாமைத்துவத்தைச் சார்ந்திருப்பதில்லை அல்லது விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் மீதான கடப்பாட்டைக் கொண்டிருப்பதுமில்லை.

இ) வட்டி

காலம் பகிர்ந்தளித்தல் அடிப்படையில் வட்டி வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

ஈ) வாடகை மற்றும் ஏனைய வருமானம்

வாடகை வருமானம் உள்ளபடியான அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது

உ) ஆதாயங்களும் நட்டங்களும்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மற்றும் முதலீடுகள் உள்ளிட்ட ஏனைய நடைமுறையற்ற சொத்துக்களின் விற்பனையிலிருந்து தோன்றுகின்ற வருமான தன்மை கொண்ட தேறிய இலாபங்களும் நட்டங்களும் விற்பனை வருமானத்திலிருந்து அத்தகைய சொத்துக்களின் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற தொகை மற்றும் அது தொடர்பான விற்பனைச் செலவினங்கள் கழிக்கப்பட்ட பின்னர் விரிவான வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. பிரதான வருமானச் செயற்பாடுகளுக்கு அப்பாற்பற்ற சடுதியான செயற்பாடுகளிலிருந்து எழுகின்ற இலாபங்களும் நட்டங்களும் அத்துடன் பொருண்மையற்ற இதே மாதிரியான கொடுக்கல் வாங்கல் தொகுதியிலிருந்து எழுகின்ற இலாபங்களும் நட்டங்களும் தேறிய அடிப்படையில் சேர்க்கப்பட்டு, அறிக்கையிடப்படுகின்றன. நட்டத்தை வெளிப்படுத்தும் சிறந்த மதிப்பீடு காணப்படுமாயின் ஏற்பாடொன்று அங்கீகரிக்கப்படுகின்றது.

2.5 செலவை அங்கீகரித்தல்

குறித்த வருமானத்தை உழைப்பதற்கும் அதற்காக ஏற்பட்ட கிரயத்திற்கும் இடையில் காணப்படுகின்ற நேரடியான தொடர்பின் அடிப்படையில் செலவினமானது விரிவான வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றன. திறமை நிலைமை அடிப்படையில் வியாபாரத்தை நடாத்திச் செல்வதில் மற்றும் ஆதனம், பொறித்தொகுதி, உபகரணத்தைப் பராமரிப்பதில் செலவிடப்பட்ட எல்லா செலவினங்களும் விரிவான வருமானக் கூற்றுக்கு கணக்கிடப்படுகின்றன. விரிவான வருமானக் கூற்றினை சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காக, "செலவினத்தின் தொழிற்பாடு" முறை கூட்டுத்தாபனத்தின் செயலாற்றல் கூறுகளை நியாயமாகச் சமரப்பிப்பதன அடிப்படையில் சேரக்கப்படுகின்றன.

2.6 ஒப்பிடுதல்

தேவையான போது, நடைமுறை ஆண்டில் சமரப்பிக்கப்படுகின்ற மாற்றங்களை உறுதிப்ப டுத்துவதற்கு ஒபபீட்டுத் தரவுகள் சீராக்கல் செய்யப்பட்டுள்ளன.

2.7 அறிக்கையிடல் திகதிக்குப் பின்னர் இடம்பெற்ற நிகழ்வுகள்

பொருத்தமான போது, அறிக்கையிடல் திகதிக்குப் பின்னர் இடம்பெறுகின்ற அனைத்துப் பொருண்மையான நிகழ்வுகளும் நிச்சயிக்கப்பட்டு தேவையான சீராக்கல் செய்யப்படுகின்றன.

2.8 பிரிவு ரீதியான தகவல்

SLFRS 8 மற்றும் குறிப்பிட்ட இணைப்புக்களில் கொடுக்கப்பட்டுளள் பகுதி மற்றும் குறிப்பிட்ட வெளிப்பாடுகளின் பிரிவு அடிப்படையில் கூட்டுத்தாபனம் இனம் கண்டுள்ளவை நிதிசார்



கூற்றுக்களிற்கான குறிப்புக்களில் காண்பிக்கப்பட்டுள்ளன. நிருமாண, கொங்கிரீட் தளங்கள் மற்றும் மெக்கானிக்கல் மற்றும் ஏனைய பிரிவுகள் கூட்டுத்தாபனத்தினால் கூறுகளாகப் பிரிக்கப்பட்டு இனங்காணப்பட்டுள்ளன.

2.9 அரசாங்க மானியம்

பின்வரும் நியாயமான உறுதிப்பாடுகள் கிடைக்கின்ற வரை நிதிசாராத மானியங்கள் உட்பட அரசாங்க மானியங்கள் நியாயப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுவதில்லை.

(அ) அதனுடன் இணைந்த நிபந்தனைகளுக்கு நிறுவனம் இணங்கியொழுகும் வரை, மற்றும்

(ஆ) மானியங்கள் கிடைக்கப்பெறும் வரை.

மேற்படி மானியங்கள் பிற்போட்ட வருமானமாக இனங்காணப்பட்டு சொத்தின் பயனுள்ள ஆயுட்காலம் முழுவதற்கும் ஒரு முறையான அடிப்படையில் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனம்
2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி..)

சகல தொகைகளும் இலங்கை ரூபாவில்	குறிப்பு	2018	2017
குறிப்பு 01-வருமானம்			
நிர்மான வருமானம்		2,348,144,548	1,852,645,554
வெளிநிலை விற்பனைகள்- கொங்கிரீட் உற்பத்திகள்		306,631,181	289,790,958
உள்நிலை விற்பனைகள் - கொங்கிரீட் உற்பத்திகள்		46,961,555	31,266,900
வேலை சேவைகள்		175,416,117	118,069,943
தார் வெளிநிலை உற்பத்திகள்		-	6,034,139
தார் உள்ளக உற்பத்திகள்		-	41,565,349
உறுக்கு உற்பத்திகள்		1,034,859.00	8,899,560
மொத்தம்		**2,878,188,260**	**2,348,272,403**
குறிப்பு 02-விற்பனைக் கிரயம்			
தொழிற்பாட்டு செலவுகள்			
ஊழியர் நலன்கள்	04.01	689,010,068	676,073,334
சீமேந்து		58,610,230	75,722,124
மணல்		29,382,465	39,624,062
உலோகம்		42,138,926	66,760,883
உருக்கு		135,572,706	112,490,700
பலகை		9,196,420	10,274,800
எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி		90,572,607	73,025,092
வெடிபொருட்கள் மற்றும் வெடிக்க வைக்க்கூடிய பொருட்கள்		3,009,616	399,374
உடன் தயார் கொங்கிரீட்		47,208,852	26,057,967
கொங்கரீட் உற்பத்திகள்		43,337,946	36,038,298
இயந்திரங்கள் மற்றும் வாகன உதிரி பாகங்கள்		21,514,927	20,899,908
காகிதாதிகள் கொள்வனவு		2,421,237	1,930,639
தார் கொள்வனவு		12,341,491	74,287,967
மின்சார உதிரிபாகனங்கள் கொள்வனவு		65,751,307	64,519,354
குழாய்கள் மற்றும் வடிகால் பொருட்கள் கொள்வனவு		4,785,072	7,539,061
ஏனைய கையிருப்புகள்		167,349,558	176,193,042
கிரவல் மண்		(3,101)	82,404,832
வாடகை கட்டணங்கள்(உள்ளக)		7,928,893	13,677,456
வாடகை கட்டணங்கள் (வெளி)		124,729,053	101,247,073
போக்குவரத்து கட்டணங்கள்(பொருட்கள்)		3,581,899	7,933,056
போக்குவரத்து கட்டணங்கள (ஏனையவைகள்)		11,597,586	12,728,866
களஞ்சியபடுத்திய கட்டணங்கள்		68,000	51,600
காப்புறுதி நம்பிக்கை சார் உத்தரவாதம்		1,716,884	1,836,026
வாகன காப்புறுதி		-	202,539
களஞ்சியசாலை காப்புறுதி		83,246,139	83,665,496
பொறித்தொகுதி, இயந்திரங்கள் உபகரணங்கள் தொடர்பான தேய்மானங்கள்		10,960,847	10,960,847
மோட்டார் வாகனங்களுக்கு மீதான தேய்மானம்		534,311	511,011
திருத்தங்கள்,பேணுதல்கள்-பொறித்தொகுதி, இயந்திரங்கள் மற்றும் உபகரணம்		2,195,374	1,924,828
திருத்தங்கள்,பேணுதல்கள்-வாகனங்கள்		1,542,160	1,006,428
திருத்தங்கள்,பேணுதல்கள்-பொறித்தொகுதி, இயந்திரங்கள் மற்றும் உபகரணம்(போக்		1,181,256	790,938
திருத்தங்கள்,பேணுதல்கள்-பொறித்தொகுதி, இயந்திரங்கள் மற்றும் உபகரணம்(ஏனை		697,217	369,869

அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனம்
2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி..)

சகல தொகைகளும் இலங்கை ரூபாவில்	குறிப்பு	2018	2017
தொழிற்பாட்டு செலவுகள்(தொடர்ச்சி)			
பதிவு மற்றும் அனுமதி பத்திரம் கட்டணம்		632,087	1,011,525
உப ஒப்பந்தங்கள்		921,432,540	257,469,051
கழிவுகள்		188,925	288,512
தாமதக் கடட்ணம்		13,165,225	8,319,009
தண்டங்கள்		-	1,010
ஒப்பீ		8,756,600	8,168,842
பிணைமுறைகளுக்கான கட்டடங்கள்		13,186,379	41,063,338
தொலைபேசி தளங்கள்		3,962,371	7,042,598
தபால் கட்டணம் டெலெஹ் மற்றும் தளங்கள்		13,530	27,219
அச்சடித்தல் காகிதாதிகள் தளங்கள்		1,006,776	777,702
போக்குவரத்து தளங்கள்		8,030,828	7,614,161
உபசரணை		3,363,209	2,565,460
முத்திரை கட்டணம்		3,870	6,697
வாடகை		22,746,473	22,005,980
மின்சாரம்		6,902,827	4,955,350
கணனி		46,630	353,600
நீர்		2,116,626	2,490,652
விலைமனுகோரல் கட்டணம்		69,243	84,850
நலனோம்புகை மற்றும் பொழுது போகசு- தளங்கள்		-	2,500
காப்புறுதி		105,340	47,620
காப்புறுதி சகல இடர் கொள்கை - தளங்கள்		2,682,833	8,843,519
பத்திரிகைகள் சஞ்சிகைகள்		6,170,385	10,153,861
ஏனைய உதிரிச்செலவுகள் - தளங்கள்		109,315	89,620
ஆலோசனை மற்றும் தொழில் வான்மை கட்டிடங்கள்		12,254,785	10,288,006
நிர்மாணக் கைத்தொழில் சான்று நிதிய வரி		1,380,094	1,823,648
கட்டிட திருத்தங்கள் - தளங்கள்		287,079	3,031,229
சேவை கட்டணங்கள்- தளங்கள்		35,235	21,125
சோதனை கட்டணங்கள்- தளங்கள்		1,871,711	1,635,290
விளம்பரங்கள்		10,252,205	3,687,717
திருத்தங்கள் பேணுதல்கள்- அலுவலக உபகரணம்		121,450	112,300
கட்டணம் மற்றும் வரிகள்		68,767	53,732
